Registered No. M. 878

# பூர்ணசந்திரோதயம்.

**A Tamil Monthly Journal**

Devoted to Theosophy, Religion

Science, Art and Civilization.


| | | |
|---|---|---|
| தொகுதி 7 | 1916-ஞு நவம்பர்மீ<br>நளஞு ஐப்பசிமீ | பகுதி 7 |


அ. ரங்கசாமி ஐயர், B.A.,B.L.,F.T.S, பத்திராதிபர்

வருஷ சந்தா ரூ. 2. தனிப்பிரதி அணா 4.

மதுரை.

விக்டோரியா அச்சியந்திரசாலையில்

பதிப்பிக்கப்பெற்றது.

Copy Right Reserved.

# பொருளடக்கம்.

# (CONTENTS.)

| | | பக்கம். |
|---|---|---|
| 1. | தற்கால நிலைமை—ஆர். ரங்கஸ்வாமி ஐயர் பி. ஏ.<br>Current events—R. Rangaswamy Iyer. B. A. | 243 |
| 2. | மீராபாய்—ஆர். ஸ்ரீநிவாஸ ஐயர் யம். ஏ.<br>Meerabai—R. Sreenivasa Aiyer. M. A. | 252 |
| 3. | மெய்ஞ்ஞானப்பால்—வள்ளலூர் பரஞ்சோதியார்<br>Divine Wisdom—Vallaloor Paranjothiyar | 259 |
| 4. | பிரஹ்மக்ஞான தரிசனம் (பாலபாடம்) வி. வெங்குசாமி ஐயர்<br>Elements of Theosophy—V. Vengusamy Iyer | 267 |
| 5. | சார்தல்—ஜகவீரபாண்டியன்<br>Gentleman—Jagaveerapandian | 270 |
| 6. | சிறுவர்க்குரிய விஷயம்—வஸந்தானந்தன்<br>Children's corner—Vasanthanandan | 272 |
| 7 | முக்ய அறிவிப்பு—B. S. ராமசுப்பையர்<br>Important Notice—B. S. Ramasubbier | 275 |
| 8. | சமாசாரம்—News | 276 |
| 9. | புத்தக வரவு (Review of Books) | 281 |

## லோக குருவாகிய பரமர் வருவானேன்?

இதுவரை பூர்ணசந்திரோதயத்தில் தமிழில் வெளி வாரதது. பிரஹ்மக்ஞான சபையாருள் ஸூக்ஷ்ம திருஷ்டி பெற்ற ஒரு வித்தராகிய ஸ்ரீமான் லெட்பீடரவர்கள், விட்னீ சன்கார்டியா ஹாலில், ஓர் பெரிய ஜனத் திரளுக்குச் செய்த அரியதோர் உபந்யாஸம். ஜகத்குரு வரவேண்டியதற்கு தற்காலம் என்ன அவசியம் நேர்ந்தது என்று பல காரணங்கள் எடுத்துக் கூறப்பட்டுள்ளன. இதன் விலை அணா ஒன்று தான். தபாற்கூலி பிரத்யேகம் ½ அணா. வேண்டுவோர் அடியிற்கண்ட விலாசத்திற்கு 1½ அணா, ஸ்டாம்பு மூல மனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.

B. S. ராமசுப்பையர்.

பிரஹ்மக்ஞான மந்திரம்,

மதுரை.

# பூர்ணசந்திரோதயம்.


| | | |
|---|---|---|
| தொகுதி 7 | 1916-௵ நவம்பர்௴<br>நள௵ ஐப்பசி௴ | பகுதி 7 |


## தற்கால நிலைமை.

சில மாதங்களுக்குமுன் சென்னையில் ஸ்தாபிக்கப்பெற்ற "சுத்தி சபை"யாரால் சில மகம்மதியர்களை ஹிந்துக்களாக்கியதாகவும், அவர்களுக்கு ஹிந்து நாமகரணம் செய்ததாகவும், பத்திரிகைகளில் படித்தோம். தென் இந்தியாவில் பிறமதத்தவரை ஹிந்துவாக மாற்றுவது நம்முடைய ஞாபகத்துக்கு எட்டியவரை கிடையாதாகையால், இந்த சமாசாரமானது எல்லாருக்கும் ஆச்சரியத்துக்கும் ஆழ்ந்த யோசனைக்கும் காரணமாக விருக்கலாம். ஹிந்து மதத்தில் பிறந்தவனே ஹிந்துவென்றும், வேறுமதத்தவன் ஹிந்து ஸநாதன தர்மத்திலும் வேதத்தின் உண்மையிலும் நம்பிக்கையுள்ளவனாக விருந்தாலும், அவன் ஹிந்துவாக மாறுவதற்கு யாதொருவிதியும் இல்லையென்றும், ஒருவன் ஹிந்துவாகவிருந்து அன்னிய மதத்தில் பிரவேசித்துவிட்டு அப்பால் ஹிந்துவாக வேண்டுமென்று எவ்வளவு தீவிரமாக விரும்பினாலும், அவனை ஏற்றுக்கொள்ள மார்க்கமில்லையென்றும், பெரும்பாலர்களுடைய எண்ணமாக விருக்கின்றது.

இவ்வெண்ணம் சாஸ்திரத்திக்கும், சரித்திரத்திற்கும் ஒத்தததா என்று ஆலோசனை செய்யவேண்டுவது மிக்க அவசியம். ஆங்காங்கு கிறிஸ்தவ பாதிரிமார்களுடைய வும், ஒய். எம். ஸி. ஏ. என்ற வாலிபர்களின் கிறிஸ்தவ சங் கங்களுடையவும் முயற்சியாலும் நம்மவரின் அசிரத்தையி னாலும் அநேகம் வாலிபர்கள் கிறிஸ்தவர்களாக மாறுகிறார் கள். அவர்களில் சிலர் மறுபடியும் நற்புத்திவந்து ஹிந்து வாக விருப்பமுள்ளவர்களாக இருக்கிறார்கள். அவர்கள் திரும்பிவர மார்க்கமுண்டா? சுத்திபெறுவதற்கு ஸம்ஸ்கா ரங்கள் வேதங்களிலேயே விதிக்கப்பெற்றிருக்கின்றன வெ ன்று மேற்கண்ட சுத்திசபையார் சொல்லுகிறார்கள்.

* * *

மேலும் ஒரு காலத்தில் இந்தியாவானது பெரும்பா லும் பௌத்தர்களால் நிரம்பியிருந்தது. இப்போது பௌ த்தர்கள் பெரும்பாலும் கிடையாதென்றே சொல்லலாம் முன்னிருந்த பௌத்தர்கள் எங்கே சென்றார்கள்? புதிதாக வந்த ஹிந்துக்கள் எங்ஙனம் எங்கிருந்து வந்தார்கள்? பௌத்தர்கள்தாமே ஹிந்துக்களாக மாறினார்கள் என்பது சரித்திரவாயிலாக நாமறிந்த விஷயம்.

* * *

வடஇந்தியாவில் ஆர்ய ஸமாஜத்தை ஸ்தாபித்தவரும் மகாப்பிரக்கியாதிபெற்றவருமாகிய ஸ்வாமி தயாநந்தஸரஸ் வதி எழுதியுள்ள ஸத்யார்த்த பிரகாசம் என்ற புஸ்தகத் தில் மற்ற ஜாதியாரை ஆர்யர்களாக மாற்றலாம் என்று விளங்கக் கூறியுள்ளார். பஞ்சாப் மாகாணத்தில் ஆர்ய ஸமாஜம் முக்கியமாய்ப் பரவியுள்ளது. இதர ஜாதியாரை ஆர்யர்களாக ஸம்ஸ்கார மூலமாக மாற்றிவருகிறார்கள் இதேமாதிரி வடஇந்தியாவிலும் பலபாகங்களிலும் செய்து வருகிறார்களாம். இம்மாதிரியே தென் இந்தியாவிலும் „சுத்தி சபை" ஸ்தாபித்திருக்கிறதாகவும் வெளியாகிறது.

புதிதாக ஹிந்துவாக மாறினவன் எந்தவர்ணத்தானாக அங்கீகரிக்கத்தக்கவன். அவன் கல்யாணம் செய்யவேண்டுமானால் சாதாரணமாக உள்ள நான்கு வர்ணத்தார் அவனுடன் சம்பந்தம்செய்ய முன்வருவார்களா என்ற கேள்விகள் மனதில் உதிக்கலாம். இம்மாதிரியான சந்தேகங்களைத்தீர்க்க அவாவினர் மதராஸ் லிங்கிசெட்டி தெரு 279 நிர். வீட்டில் கே.வி.வர்மா என்பவருக்கு எழுதி சந்தேகம் தெளியலாம.

* * *

மாதிருதேச பக்தியானது நம்மவர்களில் வாலிபர்களிடம் குடிகொண்டிருக்கின்றது என்பதில் சந்தேகமில்லை. அவர்கள் இன்னும் சுயநன்மையென்ற பிசாசினால் பிடிபட வில்லை. அவர்கள் பிறநயத்தை பரிபாலிக்கும் தன்மையர். அவர்களுடைய உற்சாகத்தைக் கிளப்பி நன்முறையில் கொண்டு செலுத்தாதது பெரியவர்களின் குறையேயன்றி வேறில்லை.

* * *

“ஸம்கே ஶக்தி꞉ கலௌ யுகே”என்பது உண்மையானவாக்கியம். முற்காலத்தில் ஒரு மனிதனுடைய ஆச்சரியகரமான தபசினாலும் நன்முயற்சியினாலும், பெரியகாரியங்கள் நடைபெற்றனவென்று புராண இதிகாசங்களில் படிக்கிறோம் ஆனால் தற்காலத்தில் நாகரீகத்தின் மேலீட்டால் சிறந்த மேனாட்டில் பார்த்தால், ஜனசமூகங்களுடைய புத்தி பூர்வமான மநமுயற்சியாலேயே அரியபெரிய காரியங்கள் நடைபெறுவதை பத்திரிகைகள் வாயிலாகத் தெரிகிறோம். பலர்மட்டும் கூட்டமாக கூடினால் அதுமட்டும் போதாது. திருநாள்கூட்டம் எங்ஙனம் ஒற்றுமையற்றதோ அதன் மாதிரி பிரயோஜனமற்றதாகும். ஆனால் பலர்கூடி தாங்கள் எதற்காக கூடியிருக்கிறோம் என்ற விஷயத்தை மனதால் ஓர்ந்து, அந்த விஷயத்தை நிறைவேற்றுதற்கு வேண்டிய முறைகளை மனதால் சிந்தித்து, பலர் மனதில் தோன்றும் பன்முறைகளை பலரும்செப்ப, அவைகளில் எம்முறைசிலாக்கியமோ அதைத்தேர்ந்தெடுத்து அம்முறையை நிறைவேற்ற

சில உத்தியோகஸ்தரை நியமித்து, அவ்வுத்யோகஸ்தர்கள் அக்காரியத்தை நிறைவேற்றுவதில் அவர்களுக்கு வேண்டிய உதவிபுரிந்து, அவர்கள் சரியானபடி தங்கள் உத்தரவாதத்தை செலுத்துகிறார்களா என்று கவனித்து, பொது நோக்கத்தை அடையும் கூட்டத்தை "ஒற்றுமைப்பட்ட சங்கம்" என்று சொல்லலாம். மேனாட்டில் இவ்வித "ஒற்றுமைப்பட்ட சங்கங்கள்" இருக்கின்றன. அங்கே அவ்வித சங்கங்களின் காரியதரிசிகள் தங்களை நியமித்த சங்கத்தாரின் காரியங்களை நிறைவேற்றுவதாகவே சொல்லலாம். ஆகையால் ஒரு காரியதரிசி தன்சங்கத்தின் சம்பந்தமாய் ஒரு அபிப்பிராயத்தைச் சொன்னால் அதற்கு கௌரவமும் உத்தரவாதமும் மிக்கது. ஏன்? அது ஒரு மனிதனுடைய அபிப்பிராயமல்ல பல மனிதர்களுடைய தேர்ந்த அபிப்பிராயம். ஆனால் இவ்விதமாக இந்தியாவில் ஒற்றுமைப்பட்ட சங்கங்கள் விசேஷமாக ஏற்படவில்லை ஆனால் ஒற்றுமைப்பட்ட சங்கங்கள்போல பல சங்கங்கள் இருப்பினும் அவைகள்பெரும்பாலும் போலிச்சங்கங்களாக விருக்கின்றன. சங்கங்களின் அங்கத்தினர் எல்லோரும் தங்களுடைய உத்தரவாதத்தை கவனிக்கிறதில்லை. உத்தியோகஸ்தர்களை நியமித்து விட்டதால் அவர்கள் பொறுப்பு முடிந்துவிட்டதாக எண்ணுகிறார்கள். அது தவறு. சங்கங்களின் அங்கத்தினர்கள் தங்கள் உத்தரவாதங்களை உணர்ந்து முயற்சி செய்வார்களானால் நம்நாடு எத்துணை நன்மை பெறும் என்று யோசித்துப் பாருங்கள்.

*
* *

மேலும் காரியங்களைச் செய்யவேண்டிய காலத்துக்கு முன்னர் போதுமான சாவகாசத்தில் யோசனைசெய்து, காரியம் நிறைவேற்றவேண்டிய முறைகளைத் தீர்மானித்து, அவைகளை கடைப்பிடித்து நடந்தால் இப்போது நடப்பதைவிட வெகுவிமர்சையாயும், மிக்கபலனுடனும் எண்ணிய கருமங்கள் கைகூடும் என்பதில் தடையில்லை. ஆகையால்

முக்கியமாய் வேண்டுவது ஒற்றுமைப்பட்ட சங்கங்களும் தீர்க்க ஆலோசனையுமே.

*
* *

பம்பாயில் சென்ற தசரா சமயத்தில் 250வாலண்டியர்கள் என்ற வாலிபர்கள் மாதிருபூமியின் முன்னேற்றத்துக்காக பைஸாபண்டு சேர்த்தார்களாம். ஒவ்வொருவரும் ஒரு பைசா கொடுக்கும்படி யாசித்து ரூ.3000 சேகரம் செய்தார்கள். இது ஒரு பெரிய கைங்கரியம். பம்பாயில் 8 வருஷங்களுக்குமுன் பிராமண வித்யார்த்தி சகாயசபை ஒன்று ஸ்தாபிக்கப்பெற்றதாம். ஆனால் அது விசேஷமாக யாதொரு பெருத்த உதவியும் செய்யவில்லையாம். ஆனால் சென்ற சில மாதங்களாக சில வாலண்டியர்கள் முன் வந்து வருவாய் தேடும் காரியத்தை ஏற்றுக்கொள்ள, மாதம் ஒன்றுக்கு ரூ 200 விகிதம் வசூலாகி வருகிறதாம். வருஷம் ஒன்றுக்கு ரூ 200 வசூலாகிக் கொண்டிருந்த சபையில் மாதம் ஒன்றுக்கு அதுதொகை வசூலானால் அச்சபை முன்னைவிட பன்னிரண்டு மடங்கு உபகாரம் செய்யமுடியுமல்லவா? இதுவெல்லாம் நம் வாலிபர்களின் கைங்கர்யம். இந்தியாவில் வித்யா விஷயமாய் உதவி செய்ய பிரியமுள்ளவர்கள் இருக்கிறார்கள். ஆனால் நன்முயற்சி யில்லாததால் தான் வித்யையை பரவச் செய்யமுடியவில்லை.

*
* *

மதுரைமாநகரில் சென்ற அக்டோபர் மாதம் 28-ம் தேதியன்று மாலையில் இரண்டு முக்கியமான விஷயங்கள் நடைபெற்றன. அமெரிக்கன் காலேஜைச் சேர்ந்த மாணாக்கர்களின் உறைவிடமானது தற்காலம் அக்கல்லூரியில் படிக்கும் மாணாக்கர்களுக்கு போதாததால் புதிதாகவேறு ஒரு உறைவிடம் கட்டுவதாக உத்தேசித்து அதற்கு மூல சிலா நிவேசனமானது அமெரிக்காவிலிருந்து வந்திருக்கும் மிஸ்வலிஸ் வார்னர்என்ற துரைசானியால்செய்யப்பட்டது. அப்பொழுது படிக்கப்பட்ட பத்திரிகையிலிருந்து முன்

கட்டப்பட்ட மாணுக்கர்களுடைய உறைவிடத்துக்கு பாதிச்செலவானதொகை அதாவது 16,000 ரூ மதராஸ் கவர்ன்மெண்டாரால் கொடுக்கப்பட்டதாயும் (சுமார் 4000 ரூ வரை இந்தியர்களால் கொடுக்கப்பட்டதாயும்) கூறப்பட்டது. பாக்கித்தொகை அமெரிக்காவிலிருந்து மிஷனதிகாரிகளா லனுப்பப்பட்டது என்றும் வெளியாயிற்று. அதன்பின்னர் அதே காலேஜைச் சேர்ந்த "புது பௌதிகரசாயன சாஸ்திர ஆராய்ச்சி சாலை" யொன்று கட்டி முடிந்திருந்ததை நூதனப் பிரவேசனம் செய்வதற்கு பெரியதோர் கூட்டமானது வெகு அழகாக பவனியாய் புதுக்கட்டடத்துக்கு வந்துசேர்ந்தது. அக்கட்டடத்தை வார்னர் என்ற துரை திறந்துவிட்டார். அதற்கு முன்னர் படிக்கப்பெற்ற பத்திரிகையிலிருந்து அந்த கட்டடம் முடிவுபெற 98,000 ரூ-க்குமேல் பிடித்ததென்றும் அதில் பாதித் தொகையை மதராஸ் கவர்ன்மெண்டார் கொடுத்ததாகவும் அக்கட்டடத்தில் மேற்கண்ட சாஸ்திர ஆராய்ச்சிக்காக 60,000 ரூ-க்கு அமெரிக்காவிலிருந்தும் இங்கிலாந்திலிருந்தும் கருவிகள் அனுப்பும்படி செய்திருப்பதாயும் இத்தொகையில் பாதி மதராஸ் கவர்ன்மெண்டார் பொறுத்துக் கொள்ளுகிறார்கள் என்றும் இதைத்தவிர இந்த சாஸ்திர ஆராய்ச்சி சாலையின் உபாங்கங்களாகிய இரண்டு கட்டடங்களுக்கு சுமார் 40,000 ரூ பிடிக்கும் என்றும், அதில் ஒன்றாகிய இவ்வாராய்ச்சி சாலையின் இயந்திரங்களை இயக்கும் சக்தியுண்டுபண்டும் சாலை ஒன்றுக்கு ரூ 25,000 பிடிக்கும் என்றும் அதிலும் பாதியை மதராஸ் கவர்ன்மெண்டார் பொறுத்துக் கொள்வதாயும் வெளியாயிற்று. ஆகையால் இக்கட்டடமும் அதன் அங்கங்களும் சாதனங்களும் சுமார் ஏறக்குறைய ரூ 200,000 பெருமான முள்ளவையாகின்றன. மேற்கண்டபடி கவர்ண்மெண்டாரால் கொடுக்கப்பட்டதைத் தவிர பாக்கி தொகை மிஸ்ஸிஸ் ஸ்மித் என்ற அமெரிக்கன் துரைசானி உயில் மூலம் கொடுத்த 30,000 டாலர் தொகையிலிருந்து செலவிடப்பட்டது.

எல்லோரும் புதுக்கட்டடத்தை பார்வை யிட்டார்கள். அது வெகு அழகாகவும் பெரிய அறைகள் அமைக்கப்பெற்றதாகவும் இருந்தது. இனிச்சாதனங்கள் வந்து அமைத்த பின்னர், இதைப்போன்ற சாஸ்திர ஆராய்ச்சி சாலை மதராஸ் ராஜதானியிலேயெ யில்லையென்று சொல்லக் கூடியதாய் அவ்வளவு சிலாக்கியமாயிருக்கிற தென்று இதைப் பார்வையிட்டார் அனைவரும் நினைத்தார்கள். அதன் பின்னர் காலேஜ் பெரிய அறையில் சகலரும் கூடினார்கள். சில பிரசங்கங்கள் நிகழ்ந்தன. சில மாணுக்கர்கள் பாடினார்கள். இரவு எட்டு மணிக்கு, கூட்டம் கலைந்தது.

*
* *

அமெரிக்கன்மிஷன் சங்கத்தின் காரியதரிசியான டாக்டர் ஸ்மித் செய்த உபந்யாசத்தில் அமெரிக்கன் காலேஜ் ஏன் ஸ்தாபிக்கப் பெற்றது? புது சாஸ்திர ஆராய்ச்சிசாலை ஏன் இவ்வளவு செலவிட்டு, நிர்மாணம் செய்யப் பெற்றது? என்று வியக்தமாய்க் கூறினார். இக்கல்லூரியில் கற்கும் மாணுக்கர் அனைவரும் கிறிஸ்தவ வேதமாகிய பைபிள் புஸ்தகத்தை படித்து அதன் உண்மையை ஏற்று, கிறிஸ்தவர்களாகவேண்டும் என்றும், அவர்களும் பின்னர் ஏனைய வாலிபர்களுக்கு உபதேசம் செய்து அவர்களையும் கிறிஸ்தவர்களாக்க வேண்டும் என்றும் எண்ணங்கொண்டுதான் அமெரிக்காவிலிருந்தும், காணடா என்ற பிரிட்டிஷ் மாகாணத்திலிருந்தும் ஏராளமான பொருளுதவி அனுப்பி இக்கல்லூரியை ஸ்தாபித்திருக்கிறதாக தெற்றென விளக்கினார்.' இவ்வளவு தெளிவாய் எடுத்துரைத்த பின்னர் இந்திய வாலிபர்களுக்கு வித்யை கற்பிப்பதுதான் அவர்களுடைய முதனோக்கமாய்க் கொள்ளுதலும், அதைப் புகழுதலும் இழுக்கு. ஆனால் கிறிஸ்தவர்களாக நம்மை ஆக்குவதற்கு இது ஒரு சாதனமே. நாம் நம் மக்களுக்கு ஸ்வமதத்தை போதிக்கும் பள்ளிகளை ஸ்தாபியாதது பெரியதவறு. அதிலும் பக்குவமற்ற சிறுவர்களை அன்னிய மதத்தைப் புகட்டும்

ளிகளுக்கு அனுப்பி அவர்கள் மதாந்தர ப்ரவேசம் செய்யும்படியான அபாயத்துக்குள்ளாக்குவது மக்கள் பால் காட்டவேண்டிய கடமைக்கு விரோதம். கிறிஸ்தவர்களுக்குள் ரோமான்காதலிக்கானவன் தன் மக்களை பிராடெஸ்டண்டு பள்ளிக்கு அனுப்புகிறதில்லை, மேலும் இவ்வளவு விடாமுயற்சியுடன் வேலை செய்யும் பாதிரிகளுடைய முயற்யால் பார்த்துகூடநாமும் நம்முடைய காலேஜ்களை முன்னுக்கு கொண்டுவர பிரயத்தினம் செய்யாதது கொஞ்சமும் மன்னிக்கத் தகாத குற்றம்.

* * *

ஆனல் இந்தியர்கள் மிஷன் பள்ளிக்கூடங்களுக்கு தங்கள் மக்களை அனுப்புவது கிறிஸ்தவர்களாக வேண்டுமென்றல்ல. அப்பள்ளிகளில் கற்பிக்கும் இதரவித்யையை கற்கவென்றுதான். ஆகையால் இம்மாணுக்கர்கள் தங்கள் நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக கவனிக்கவேண்டியது ஒன்று உண்டு. பாதிரிகள் பைபிள் கிளாசிலும் இதர சமயங்களிலும் தம்முடைய மதத்தைப்பற்றியும் ஹிந்து, மகம்மதிய மதங்களைப்பற்றியும் ஆசாரங்களைப்பற்றியும் சொல்லும் வார்த்தைகளை பரமார்த்திகமாய் எண்ணுமல், அவைகளை உற்றுக்கவனித்து, தங்களுடைய மதங்களைப்பற்றி தாங்கள் அறிந்த உண்மைகளால் சோதித்தும், தெரியாதவைகளை தங்கள் சமய முறைகளைக் கற்பிக்கும் புத்தகங்களைப் படித்து அறிந்துகொள்ளக்கூடிய உண்மைகளைக் கொண்டு திருத்தியும் பார்க்கவேண்டும். ஹிந்து மகம்மதிய மதங்களைப்பற்றி இழிவாய் கூறப்படும் விஷயங்களைப் பற்றிச் சமாதானங்களை அவ்வம்மதப் பெரியாரிடம் கேட்டுத் தெளியவேண்டும். அவ்வாறு இழிவான வார்த்தைகளைப்பாதிரிமார்கள் சொன்னல் அதை தைரியமாய் ஆக்ஷேபிப்பதும் அவசியமாகும்.

* * *

இம்மாணுக்கர்களின் தகப்பன்மார்களுடைய உத்தரவாதம் அதிகம். கூடுமானவரை சுதேசிய பள்ளிகளுக்கே

தமது மக்களை அனுப்பவேண்டும். அப்படி முடியாதாயின் அவர்களுக்கு வீட்டில் தம்மதத்தினஉண்மைகளைக்கற்பித்தலவசியம். "ஹிந்துமததூஷணையின் பரிகாரம்" என்ற புத்தகங்களையும் அத்தகைய இதரபுத்தகங்களையும் வாங்கிக் கொடுக்கவேண்டும். மேலும் பொதுவாய் ஹிந்து மதசம்பந்தமான கற்பினைகளைப் புகட்டும் உபந்யாசங்கள் நிகழும்படி செய்து அவைகளை பாதிரிபள்ளியில் படிக்கும் மாணுக்கர்களுக்கு உபயோகமாகும்படி செய்யவேண்டும். இதுகூட நம்மவர் செய்ய முடியாதா? யாராவது ஒரு நன் கொடையாளி கிறிஸ்தவபள்ளிகளில் பயிலும் மாணுக்கர் ஒவ்வொருவருக்கும் ஹிந்து மதத்தைப்போற்றும் புத்தகங்களை இனமாக கொடுக்க முன்வந்தாலாகாதா?

*
* *

மேற்கூறிய பாதிரிகளின் நன்முயற்சியில் மெச்சத்தக்க விஷயங்கள்பலவுள. தாம் எது நன்றெனக்கொண்டார்களோ அதைமுடிக்கஎன்னபொருள் செலவுசெய்கிறார்கள்? எவ்வளவுபிரயாசையெடுக்கிறார்கள்? எவ்வளவு உற்சாகத்துடன் முயற்சிசெய்கிறார்கள். ஆனால் கண்கூடாகக் கண்டும்நம்மால் ஒன்றும் இயலாதென்று நம்மவர் திகைக்கிறார்களே. அமெரிக்காவில் நம்மைக்காட்டிலும் மிகுந்த பணக்காரர்கள் ஏராளமாக விருக்கிறார்கள். ஆனால் நம் நாட்டில் சுதேசத்திற்காகச் செலவழிக்க வேண்டிய பணமுள்ளவர்கள் இல்லையென்று சொல்லமுடியாது. இப்பொழுது கொஞ்சம் கொஞ்சமாக வித்யா விஷயத்தில் செலவழிக்க சில தனிகர்கள் முன்வருகிறார்கள் என்பது வாஸ்தவம். ஆனால் இது போதாது. தனிகர்கள் தாராளமான மனதுடன் வித்யாதானத்தைவிடச் சிறந்த தர்மம் ஒன்றுமில்லையென்று உணர்ந்து ஏராளமான பொருள்களைக் கொடுக்கவேண்டுவது அவசியம். அப்படிச் செய்தால், எவ்வளவு நாம் கொடுக்கிறோமோ அவ்வளவு தொகை கவர்ன்மெண்டிலும் கொடுக்கிறார்கள். மேற்கண்ட விதங்களில் எல்லாம் எண்ணங்கள் அவ்விடம் சென்றவர்கள் மனதில் உதித்து இருக்கும் என்றும், அவ்வெண்ணங்கள் கடை முறையில் நம நாட்டுக்கு நன்மை விளைக்கும் என்றும் திண்ணமாய் நம்புகிறோம்.

ஆர். ரங்கஸ்வாமி ஐயர்.

2-80

## மீராபாய்.

(224-ம் பக்கத் தொடர்ச்சி)

அங்கம் 3. களம் 3.

காலம்:—இரவு. இடம்:—மீராபாய் வசிக்கும் குடிசை. நாடகபாத்திரர்:—மீராபாய்.

மீரா—இதென்ன, என்பதி என்னைக் கொல்லத் தீர்மானித்தார்? அவர் மனமெப்படி இதைச் செய்யத் துணிந்தது? என்ன கோபமிருந்தாலும், என்னுயிரை மாய்க்கத் துணிவதென்றால் நம்பக்கூடியதாயில்லையே? இப்படியும் தானென்னை யீசன் சோதிக்கிறாரா? என்ன சோதித்தாலென்ன; எனக் கவரிடத்திலிருக்கும் பக்திமட்டும் திடமாயிருக்கும்பக்ஷத்தி லெனக் கொருநாளும் குறைவு வராது. பகவத் பக்தியின் விசேஷத்தைக் குறித்து நானென்ன சொல்வது? சகல துக்கங்களையும் மாற்றி ஆநந்த ஸாகரத்தில் மூழ்கவைக்கும் சக்தி யதற்கேயுளது. கோபாலனுடைய ஸ்வரூபத்தை ஸ்மரிப்பதினால் நமது கோசங்கள் ஐந்திற்குமுண்டாகும் ஸம்சுத்தி நிகரற்றதென்று ஞானிகள் கூறியிருக்கும் வார்த்தைகளினுண்மை அநுபவித்தாலல்லவோ விளங்குகிறது. நமது பஞ்சேந்திரியங்களையும் மனதினாலடக்கி, அம்மனதைப் புத்தியினாலடக்கி, இவ்விதமடக்கப்பட்ட மனதை ஸ்ரீமந்நாராயண மூர்த்திக் கர்ப்பணம்செய்ய, அம்மனம் அவரிடத்திலிருந்துபெருகிக்கொண்டிருக்கும் அன்புவெள்ளத்தில்மூழ்கி தன்னிடத்திலிருக்கும் ரஜஸ்தமோ குணங்களை யிழந்து நித்ய ஸத்வ ஸ்வரூபத்தையடைந்து அந்த ஆநந்தப்ரவாஹத்தை உலகத்திலுள்ளோ ரநுபவிக்கும்படி செய்யத்தக்க ஓர் மார்க்கமாகிறது. அப்படி செய்வதைவிட வேறுசுகம்—(சுந்தரி வருகிறாள்) சுந்தரீ வா, உங்களையெல்லாம் விட்டுப்பிரிந் தநேக யுகங்களாய் விட்டன போலிருக்கிறதெனக்கு. என்ன, நடந்துவந்திருக்கிறாய்? உன் பல்லக்கெங்கே?

சுந்—நானதைக் கொஞ்சதூரத்தில் நிறுத்தி யிருக்கிறேன்.

மீரா—அரண்மனையில் மஹாராஜா சௌக்கியமாயிருக்கிறாரா? இன்னுமங்குள்ளவர்களனைவரும் சௌக்கியமா?

சுந்—எல்லோரும் சௌக்கியம்தான். ஆனால் நீ யில்லாத அரண்மனை யரண்மனையாகவா இருக்கிறது? அதனழகே போய்விட்டதே. உன்னைவிட்டுப் பிரிந்த எங்களுக்கிருக்கும் வருத்தத்திற்குத்தான் அளவுண்டோ? எப்போதுமெனக்குன் ஞாபகந்தான். நானுன்னைப் பார்க்க வரலாமென்றாலோ மஹாராஜா சம்மதப்படுகிறாரா? உன்னையெப்போது காணப்போகிறேனென்றிருந்தேன். ஏதோ என்னுடைய நல்லகாலம், மஹாராஜாவே என்னையின்றைதினம் கூப்பிட்டு இந்தப் பெட்டியைக் கொடுத்து "இதையிப்படியே கொண்டுபோய் மீராவிடம் கொடுத்து இதிலிருக்கும் புஷ்பஹாரத்தை யவள் தரித்துக்கொள்ள வேண்டுமென்று நான் சொன்னதாகச் சொல்" என்றார். எனக்கப்போதுண்டான ஆநந்தத்திற்கு அளவே கிடையாது. உடனே இதையெடுத்துக்கொண்டு இங்கு அதிவேகமாய் வந்தேன்.

மீரா—சுந்தரீ, மஹாராஜாவிற் கென்மீது கருணை வந்திருக்கிறதா! ஏதோ முன் கோபத்தினால்—(தனக்குள்) கொலையாளிகள் வந்ததிவளுக்குத் தெரிந்திருக்குமோ? தெரிந்திருக்காது. அதை நானிவளிடம் சொல்லலாகாது. சொன்னால் இவள் மஹாராஜாமீது ரொம்ப கோபங்கொள்வாள் (வெளிப்படையாக)—ஏதோ முன்கோபத்தினாலென்மீது கடிந்துகொண்டார் போலும். எனக்கப்போதே தெரியும். தங்கமான அவர் மனது ஒருநாளும் பிறருக்குக் கெடுதலை நினையாது. அப்பெட்டியைக் கொடு என்கையில். (பெட்டியை வாங்கிக்கொள்ளுகிறாள்.) கிருஷ்ணா! உனது லீலையை வர்ணிக்க யாரால் முடியும்? (பெட்டியைத் திறக்கிறாள். ஸர்ப்பங்க ளிரண்டையும் கண்டு பயந்து பிரமிக்கிறாள். சுந்தரியும் பிரமித்தவள்போல் நடிக்கிறாள்.)

சுந்—அடி, பாம்படியது, தொடாதேயதை. இப்படியுந்தானொருவர் செய்வாரோ? இன்றைச்கவ ரிப்பெட்டியை

யென்னிட மொப்புவித்தபோ தென்ன சந்தோஷப்பட்டேன்! ஐயோ, அந்த சந்தோஷமெல்லாம் பாழாய்ப் போயிற்றே. இப்படியுந்தா னொருவர் செய்யத் துணிவாரோ? ஐயோ!

மீரா—(பிரமம் தெளிந்து) சுந்தரீ, இதென்ன வாச்சரியமடீ! என்னவிருந்தாலு மிப்படி நடக்குமென்று நானொருக்காலு மெண்ணவில்லையடீ. நானெவ்வளவு சந்தோஷத்துடனிப் பெட்டியைத் திறந்தேன். என்மனது இந்த ஒரு க்ஷணத்துக்குள் எண்ணுதெல்லா மெண்ணிற்றே. மனமே, உனக்கவ்வளவுதான் கொடுத்து வைத்தது. இந்தப் பாபியை யெப்போது வந்தடைந்தாயோ அப்போதே யுனக்குக் கெட்ட கால மாரம்பித்து விட்டது. இனி யொருக்காலுமுனக்குச் சந்தோஷமென்பதே கிடையாது. சுந்தரீ, என்பதிக்கு நாளுக்குநாள் என்மீது கோபமதிகரிக்கிறது போலல்லவா தோன்றுகிறது. அவ்வளவு கோபமுண்டாக நானென்னடி செய்தேன்? காரணமில்லாம லென்மீது கெட்ட அபிப்பிராயம் கொண்டு இவ்வாறென்னை வருத்துகின்றாரே. நானென்ன செய்வேன்!

சுந்—நானுமெவ்வளவோ சொல்லிப் பார்த்தேனம்மா, அவரொன்றையும் கேட்கிறதில்லை. கேட்டாற்றானே நானேதாவது சொல்லமுடியும்?

மீரா—நீ யென்னசெய்வாய்? உனக் கென்மீதிருக்கும் பிரியத்தினால் நீ யெவ்வளவோ சொல்லிப் பார்த்துத்தானிருப்பாய். சொல்லிப் பயனென்ன? அவரதைக் கேட்க வேண்டாமா?—என்னவிருந்தாலும் பதி பதிதானே. அவரைப்பற்றி நானெப்படிக் குற்றமாய்ப் பேசலாம்? அவரிட்ட கட்டளையை யெப்படி நான் மறுக்கலாம்?

சுந்—மீரா, நன்றாய்த் தானிருக்கிறது. ஏதோ அவர் மதியையிழந் தெதையோ வுளறினாராம். அதையும் நீ கேட்கிறேனென்கிறாயே. எதற்கும் மிதமுண்டு. பதியென்று

லெதையும் கேட்கிறதா? நான் சொல்வதைக்கேள். நீயிந் நகரத்திலிருந்தா லிவரிப்படித்தா னுன்னை ஹிம்ஸித்துக் கொண்டிருப்பார். இந்நாட்டைவிட் டெங்கேயாவது ஓடிப்போ.

மீரா—சுந்தரீ, நீகூட இப்படிப் பிதற்றுகிறாய். உன் புத்திகூட எங்கே போயிற்று?—நானுன்னைக் குற்றம் சொல்லலாமா, நான் கடிந்து பேசினதற்காக என்னை மன்னிப்பாய், சுந்தரீ. இவ்வார்த்தைகளை யெல்லாம் நீ சொல்லவில்லை. உனக்கென்மீதிருக்கும் பிரியமல்லவா உன்னையிப் படியெல்லாம் சொல்லத் தூண்டிற்று.

சுந்—(தனக்குள்) இந்தசமயத்தி லிப்படிச் சொன்னு லிந்தச் சர்ப்பங்களுக்குப் பயந்திவ ளிந்நகரத்தினின்றும் ஓடச் சம்மதிப்பாளென்றும் நானெண்ணி யிருந்தேன். என்னவிருந்தாலு முயிரையிழக்க யாராவது துணிவார்களா? இவ்வளவு பதிபக்தியா யிவளுக்கு!! (வெளிப்படையாக) மீரா, இது நியாயமா உனக்கு?

மீரா—சுந்தரீ, இப்படியெல்லா மினிப்பேசாதே. சொல்லுகிறேன் கேள். ஸ்திரீகளுக்கிந்த ஸ்தூல லோகத்திற் பதி பகவானுடைய ஸ்தானத்திலிருக்கிறார். பகவானிடத்திற் பக்தியைச் செலுத்த அறியாத ஸ்திரீகள் முதலில் பதிபக்தி செய்து அந்தப் பக்தியை நிஷ்காம்ய மாக்கிப் பிறகு அதைப் பகவானிடத்தில வைக்கத் தொடங்குகிறார்கள். பகவானுக் கடுத்தபடி நாம் பக்தி செய்யத் தகுந்தவர் நம் பதியே. ஆகையா லிப்புவியில் பர்த்ருவாக்ய பரிபாலனம் செய்யவேண்டியது நமக்கவசியம். அந்தப்பதியே யெனக்கிந்த சர்ப்பங்களை யனுப்பும்போது நானவைகளைத் தரித்துக்கொண்டா லென்ன? பெரியோர்கள் 'ஹேதைவ தைவ தம்ஷீணாம்' என்று சொல்லியிருப்பதை நாம் மறக்கலாகாது.

ஆனல் சுந்தரீ, இதையனுப்ப உன்னைத்தவிர வேறு யாவரும் மஹாராஜாவுக்கு அகப்படவில்லையா? அரண்மனை

யில் சேவகர்களில்லையா? சேடிகளில்லையா? உன்னை யிந்தக் காரியத்துக்காக அனுப்பவேண்டுமா? உனக்கு வருத்தமாயிராதா? வேறு யாரிடத்திலாவது கொடுத்தனுப்பினு லெங்கே ஒருவேளை யிதை யென்னிடத்திற் கொடுக்காம லிருந்துவிடுவார்களோ என்கிற சந்தேகத்தினுலல்லவா உன்னை யனுப்பி யிருக்கிறார்? உன்னிடத்தி லவருக்குப் பூர்ண நம்பிக்கையுண்டு. அவர் வார்த்தையைத் தட்டமாட்டா யென்கிற நிச்சய மவருக்கிருப்பதாற்றான் நீ யிந்தக் காரியத்தைச் செய்வதில் மனவருத்தப் படுவாயென்று தெரிந்திருந்தும் உன்னையே அனுப்பியிருக்கிறார். எப்படியாவது நான் உயிருடனிருக்கக்கூடா தென்பதுதானே யவரெண்ணம்? அப்படி யவர் மனது கடினப்பட நானென்னடி செய்தேன். நானொரு பாபமுமறியேனே. இதோ சுந்தரீ, இதைக் கழுத்தில் தரித்துக்கொள்ளப் போகிறேன். அதுவுமென்னுயிரை மாய்க்கப்போகிறது ஆனுலென்மனது பதைக்கிறது நானுயிரிழக்கப் போகிறேனென்கிற வருத்தமில்லை. நானுயிரிழப்பதைப் பார்த்து நீயெப்படி சகிப்பாய்? நீ பொறுப்பாயா? என்னை நீ யுன்னுடைய சகோதரியினு மெவ்வளவோ மடங்கதிகமாய் நேசித்து வந்திருக்கிறாயே. ஒருவேளை யென்னைவிட்டுப்பிரிந்த துக்கம் பொறுக்கமாட்டாமலுனக்குமேதாவது கேடு நேரிட்டால் பிறகு மஹாராஜாவுக்குத் தேறுதல் சொல்பவர் யார்? உன்னை நினைந்து நினைந்துருகுவாரே. ஐயோ, ரொம்பக் கஷ்டப்படுவாரடி, சுந்தரீ. மேலுமுண்மை வெகுநாள் மறைந்திருக்காது. நானிறந்து சில நாட்களுக்கெல்லா மவருக்குண்மை தெரியவந்து, தான் செய்ததெல்லாம் தவறென்றவருணரும்படி நேரிட்டா லப்போதவர்மன மென்னபாடுபடும்? தான் செய்ததைக்குறித்து வருத்தப்பட் டுருகுவாரடி. அவருக்கப்போது யார் தேறுதல் சொல்லுவார்கள்? தான் படுகிற கஷ்டம் போதாதென்று ஊரிலுள்ள ஜனங்களெல்லாரு மவரை யதிகமாய் நிந்திப்பார்களே. அவரொரு குற்றமுமறியாதவ

ராணுலுமென் கர்ம விசேஷத்தாலென்னை யிப்படி வருத்து கிருரென்ப தவர்களுக்குத் தெரியாது. கணக்கில்லாத தூஷணைகளை யவர்மீது சுமத்துவார்கள். அவற்றையெல்லா மவரெப்படிச் சகிப்பார்? ஒருவருக்குச்செய்த தீங்குகளைக் குறித்துத் தானே வருத்தப் படுகிறவர்களுக்கு அத்தீங்கு களுக் குள்ளானவரிடத்திற் சென்று தான்செய்த அபரா தத்துக்கு மன்னிப்பைக் கேட்டுக்கொண்டாற் கொஞ்சம் வருத்தம் குறைவுபடும். அதுகூட நமது பதிக்கில்லையே. நானிறந்திருப்பேனே யாரிடத்தில் மன்னிப்புக் கேட்டுக் கொள்ளுவார்? எவ்வளவு வருந்தப்படுவாரடீ சுந்தரீ! ஐயோ, இப்போது மஹாராஜா எவ்வளவு மனத்துயரப் பட்டுக்கொண் டிருக்கவேண்டும்! அளவில்லாப் பிரியத்துட னுதரித்துவந்த என்னை யரண்மனையினின்று துரத்தினது மன்றி என்னுயிரை மாய்க்கவும துணிவதென்று லவர்மன மிப்போது ரொம்பவும் விபாகூலப் பட்டுக்கொண் டிருக்க வேண்டுமல்லவ? அந்த விபாகூலத்தைப் போக்கத்தக்க மருந்திருக்கிறதே. அதையவ ரெடுத்துக் கொள்ளக்கூடா தா? சகல துக்கங்களையும் மாற்றிப் பேரின்பத்தை யளிக் கும் பகவத்பக்தி யிருந்தா லென்விஷபத்தி லிவ்வளவு துக் கங்களை மாற்றுவதுபோலவருடைய துக்கங்களையும் மாற்றி யவருக்கு மனச்சாந்தியைக் கொடுக்குமே. ஈசா, அந்த மருந்தை யவருட்கொள்ளும்படி நீ செய்பலாகாதா? ஏனிப் படி யென்னை வருத்துகிருய்? நான் கோரின வரத்தையளி க்க இன்னுமுனக்கு மனம் வரவில்லையோ. அப்படிச்செய் வாயாணு லென்பதிக்கு மாத்திரமேயன்றி யவரது ராஜ்யத் துக்கே க்ஷேமமுண்டாகுமே. அநவரத முன்னையே தஞ்ச மென்றடைந் துன்னை பஜித்ததற்கிந்த மனேபீஷ்டத்தைப் பூர்த்தி செய்யலாகாதா. அப்படிச் செய்வதுதா னுனக் கருமையா? முன்காலங்களிலுன்னைச் சரணமடைந்த கணக் கில்லாதபேர்களுக்கு நீ யருள் புரிந்திருக்கவில்லையா? சந் திரமதி, துரௌபதி முதலான எவ்வளவோ ஸ்திரீகள் பட் டிருக்கும் கஷ்டங்களைவிட என் கஷ்ட மதிகமா? அவர்களை

யெல்லாம் காப்பாற்றி யவர்களுடைய கோரிக்கைகளை நிறைவேற்றின வுனக் கென் மீதுமட்டு மேனிவ்வளவு பராமுகம்? (மாலையைக் கழுத்திலணிந்து கொள்ளுகிருள்.)

சுந்—வேண்டாம், மீரா, வேண்டாம்.

(பாம்புகளிரண்டும் சீறிக்கொண்டு மீராபாய்க்குக் குடைபிடிக்கின்றன.)

சுந்—(தனக்குள்) இதென்ன ஆச்சரியம்! மூன்றுதினங்களாயாகார மில்லாமலிருந்த சர்ப்பங்கள்கூட இவளை ஹிம்சிக்கவில்லை. அவைகளுக்குக் கூடவா இவளிடத்திற் பிரியம்? மஹாராஜாவும் நானுமவைகளிலும் கேடுகெட்டுப் போனேமா? இனியென்று மிங்கே நிற்கமுடியாது. என்னையென்னவோ பண்ணுகிறது. ஏதாவது சாக்குச் சொல்லி விட்டுச் சீக்கிரமிங்கேயிருந்தேகவேண்டும். (வெளிப்படையாக) மீரா, பகவானுடைய கிருபை யுனக்கிருக்கிறது; உனக்கெதுதான் தீங்கை விளைவிக்கும்? நான் சீக்கிரம் சென்று மஹாராஜா விடத்தில் நடந்ததைச் சொல்லவேண்டும். இதைக் கேட்டாலாவது அவர் மனம் திரும்பக் கூடாதா? உனது பக்தி விசேஷத்தை யவரறியமாட்டாரா? (போகிருள்)

(காட்சி முடிகிறது.)

(இன்னும் வரும்)

ஆர். ஸ்ரீனிவாஸ ஐயர். M. A.

— — —

287

# மெய்ஞ்ஞானப் பால்.

காப்பு.

அஞ்ஞான வீன மகற்று மமிர்தமிம்
மெய்ஞ்ஞானப்பாலை மிகக் கொள்மின்—எஞ்ஞான்றுந்
தஞ்சமளிக்குந் தகைப்பெரும் தாரணியில்
கஞ்சமலர்க் காப்பே கழல்.

அனேக வருஷங்களாக மனிதர் எல்லாவற்றிற்கும் ஆதார மூலமான சில உண்மைகளைக் குறிதது விசாரணை செய்து வந்தார்கள். அவைகளைக் குறித்தும் பலவாறுகத் தர்க்கம் செய்தும் வாதாடிக்கொண்டும் இருக்கின்றார்கள். அவ்விஷயங்கள் கடவுள் ஒருவர் உண்டோவென்றும், அவரது சுபாவம் யாதென்றும், அவருக்கும் மனிதருக்கும் சம்பந்தம் யாதோவென்றும், மனிதர்களுடைய முன் நிலைமையைப்பற்றியும், இனி அவர்களுக்கு வரக்கூடிய யோக்கியதைகளைப் பற்றியுந்தான். இவ்விஷயங்களைக் குறித்து முற்றும் வெவ்வேறுன கருத்துகளைக்கொண்டு, மனங்கலங்கி விரோதமுற்று, ஒருவரையொருவர் பலவாறுகப் பரிகாசம் செய்தும் மறுத்தும் எதிர்த்தும், கொலைகள் செய்தும் வந்தனர். ஆகையால், இதன் பயனுக மேல்கூறிய விஷயங்களைக் குறித்துப் பொதுவாக ஜனங்கள் மனதில் ஒரு விபரீதமான அபிப்பிராயம் வேரூன்றி நிற்கின்றது. இவ்விஷயங்களைப் பற்றி நிச்சயமான யாதொரு அநுபவ உண்மையும் கிடைக்கவில்லையே; கிடைக்கக் கூடியதெல்லாம் உறுதியற்ற யூகமே தான். இந்த யூகமுங்கூட நம்பிக்கை யுண்டுபண்ணுத பல யூகங்களினின்று திரட்டி எடுக்கப்பட்டதும், அவ நம்பிக்கைக்குட் பட்ட அனேக குழப்பங்கள் நிறைந்ததுமான ஒரு வெறும் யூகமே தான். பற்பல மதங்களில் சொல்லும்படியான இந்த விஷயங்களைப் பற்றித் திட்டமாகப் பெரியவர்கள் சில உண்மைகளை எடுத்துக் கூறியிருந்தும், அவைகளை அடிக்கடி நம்பாமல் இந்த விபரீத அபிப்பிராயம் வேரூன்றி இருக்கின்றது.

ஜனங்கள் கொண்டிருக்கும் இந்த அபிப்பிராயம், ஏதோ காலப்போக்கை அனுசரித்துப் பொருத்தமுடைய தாகத் தோன்றினும், அது முற்றும் பிசகேயாம். அநுபவத்தில் வந்த உண்மைகள் உண்டு. அவ்வுண்மைகளோ அனேகம். இவைகளை மெய்ஞ்ஞானம் எடுத்துக்காட்டும். ஆனால், அவைகளை மதப் புத்தகங்கள் சொல்லுகிறது போல, நம்புங்கள் என்று சொல்லாமல், விசாரணை செய்து அநுபவத்தில் சாதிக்கக் கூடியவைதான் என்று எடுத்துக் கூறும் என்றாலும், மெய்ஞ்ஞானம் ஒரு மதமல்ல. ஆனால் மதங்களுக்கும், பூர்வீக தத்துவ சாஸ்திரங்களுக்கும் யாது சம்பந்தம் இருந்ததோ, அதே சம்பந்தந்தான் மெய்ஞ்ஞானத்திற்கும் பற்பல மதங்களுக்கும் உண்டு. இந்த மெய்ஞ்ஞானம் எந்த மதத்திற்கும் விரோதமாக யாதொன்றையும் சொல்லாமல் அந்த மதங்களில் எல்லாம், உண்மை நன்றாய் விளங்கும்படி, அவைகளையே அனுசரித்து விவரித்துக்காட்டும். யாதாவதொரு மதத்தில நியாயத்திற்கு விரோதமான யாதாவதொரு விஷயமிருந்தால் அவசியம் அது கடவுளுக்கு ஒவ்வாதென்றும், அவர் சுபாவத்திற்கு முறைகேடானதென்றும் தள்ளிவிடும். ஆனால் யாதாவதொரு மதத்திலாவது, எல்லா மதங்களிலுமாவது, நியாயத்திற்குப் பொருத்தமான விஷயமிருந்தால், மெய்ஞ்ஞானம் அதை அங்கிகாரம் செய்து அதையே நன்றாய்த் தெளிவுறும்படி விவரித்து நியாயமென்று ஒவ்வொருவர் மனதிலும் படும்படி செய்து, இவ்விதமாக எல்லா மதங்களையும் தன்னுள் அடக்கி நிற்கின்றது.

முன் கூறிய விஷயங்களைப்பற்றிய உண்மைகள் அநுபவத்தில் ஆய்ந்தறியக் கூடியதென்பதே மெய்ஞ்ஞானத்தின் கொள்கை. அவ்விஷயங்களைக் குறித்து முன்னமே வேண்டிய மட்டும் மிகுந்த அநுபவஞானம் உண்டென்று அது எடுத்துக் காட்டும். ஒவ்வொரு மதஸ்தரும் தாங்கள் தாங்கள் கண்டபடி அந்த உண்மைகளை எடுத்துக் கூறுகின்றார்க

ளென்று அது சொல்லும். மதங்கள் ஒவ்வொன்றும், அது அது எடுத்துச் சொல்லும் உண்மையை வெவ்வேறு வார்த்தைகளைக் கொண்டு எடுத்துச் சொல்லி வெளி பேதமுள்ளவைகளாகக் காணப்படினும், அந்த அந்த மதஸ்தர்கள் தாங்கள் நம்புங்கொள்கைகளை வெவ்வேருகக் கூறுகின்றவர்களாகத் தோன்றினும், மதங்கள் எல்லாம் உண்மையாகவே முக்கியமான விஷயங்களில் பொருத்தமுடையவையாய் இருக்கின்றன. நல்ல மனிதன் ஒருவன் அநுசரிக்கவேண்டிய விதிகளை பற்றியும், அவன் விருத்தி செய்யவேண்டிய நற்குணங்களைப் பற்றியும், அவன் அவசியம் தள்ளிவிடவேண்டிய துர்க்குணங்களைப் பற்றியும் எல்லா மதங்களும் ஒன்ருகவே தான் கூறுகின்றன. ஒவ்வொருவரும் ஜீவியத்தில் அனுசரிக்கவேண்டிய இந்தக் காரியங்கள் மட்டில், இந்து மதமானுலும் சரி, பௌத்தமதமானுலும் சரி, ஜோராஸ்ட்டிரியர் அனுசரிக்கும் பிராசீந மதமானுலும் சரி, முகம்மதியருடைய இஸ்லாம் மதமானுலும் சரி, யூதர்மதமானுலும் சரி, கிறிஸ்தவ மதமானுலும் சரியே. இவைகள் எல்லாம் ஒன்றே தான்.

மெய்ஞ்ஞானம் என்பது, விசாரணை செய்யாத வெளி ஜனங்களுக்கு அவர்கள் அறிந்து கொள்ளக்கூடிய, பிரபஞ்சத்தைப் பற்றிய ஒரு யூகம் என்று தோன்றலாம். ஆனுல், விசாரணை செய்தவர்களுக்கு மெய்ஞ்ஞானம் யூகம் அல்ல அநுபவ உண்மையே ஆம். ஏனென்ருல் அது உண்மையாகவே அநுபவ சாஸ்திரம். விசாரணை செய்யக்கூடியது. அதன் கொள்கைகள் யாவும் அநுபவ பூர்வகமாக விசாரணை செய்ய விரும்பும் மனிதனிடத்து இருக்கவேண்டிய குணங்களைப் பிரயாசப்பட்டு விருத்தி செய்தவன், இனி விருத்தி செய்ய விருப்பமுள்ளவன், ஒவ்வொருவனும் சந்தேகமில்லாமல் தன் அனுபவத்திலேயே உண்மை யென்று தீர்மானஞ் செய்யக் கூடியவை. மெய்ஞ்ஞானம், நமக்குத்

தெரிந்த மட்டில் பிரபஞ்சத்தைப் பற்றிய முக்கியமான உண்மைகளின் தொகுதியாம்.

இதை அறிகிறது எவ்வாறு?

சிலர் இதை அறிந்தது எவ்வாறு என்று கேட்கலாம், யாரால் இது கண்டுபிடிக்கப் பட்டது? ஆனால் இதைக் கண்டு பிடிக்கப்பட்டதென்று நாம் சொல்ல முடியாது. ஏனென்றால் இது மனிதருக்கு உண்மையாகவே எப்பொழுதும் தெரிந்திருக்கிறது. என்றாலும் சிலவேளை உலகத்தின் சில பாகங்களில் அதைக் கொஞ்சக் காலமாக மறந்துவிடுகிறார்கள். எப்பொழுதும் மிகவும் உயர்ந்த நிலைமையை அடைந்த மனிதரது சங்கம் ஒன்று இருந்துகொண்டே இருக்கின்றது. இச்சங்கத்தவர் ஓரே சாதிக் கூட்டத்தைச் சேர்ந்தவர்கள் அல்ல. ஆனால் உயர்ந்த விருத்தியடைந்த வெவ்வேறு சாதிக் கூட்டத்தினின்று வந்து சேர்ந்த பலர் கூடிய சங்கம். இச்சங்கத்தவர்களே மெய்ஞ்ஞானத்தைப் பூரணமாக அடைந்தவர்கள். இவர்களிடத்தில் அதைக் கற்று, விசாரணை செய்யும் மாணாக்கர்களும் எப்பொழுதும் இருந்துகொண்டே இருக்கிறார்கள். அன்றியும் மெய்ஞ்ஞானத்தின் பெரும்பான்மையான பொதுக் கொள்கைகள் எப்பொழுதும் வெளி ஜனங்களுக்குத் தெரிந்தே இருக்கின்றன. சென்ற காலத்து இருந்ததுபோலவே, தற்காலத்தும் உன்னத விருத்தியடைந்த பெரியவர்கள் கூட்டம் ஒன்று உண்டு. அவர்கள் தூண்டிவிட்ட பிரகாரமே, மேற்குத் தேசத்தவர்களுக்கு மெய்ஞ்ஞானக் கொள்கைகள் வெளியிடப்பட்டிருக்கின்றன. இக்காரியங்கள் அந்தப் பெரியவர்களுடைய சில மாணாக்கர்களாலேதான் நடந்தேறி வருகின்றன.

அறியாத பலர், சில வேளைகளில் மும்முரமாய் எடுத்துக் கூறுவது யாதெனில்:—இவ்வாறு கூறியது உண்மையானால், இந்த உண்மைகள் யாவும் நெடுங்காலத்திற்குமுன்பு

தானே வெளியிட்டிருக்க வேண்டியது அவசியமல்லவோ, இதுவரையில் இவ்வுண்மைகளை உலகத்தார் நன்மையின் பொருட்டு வெளிப்படுத்தாது மறைத்து வைத்தது நியாயமல்லவே என்று இந்தப் பெரியவர்கள் விஷயத்தில் மிகவும் அநியாயமாய்ச் சொல்லுகிறார்கள். இவ்வாறு கூறுவார்கள், இந்த உண்மைகளைத் தேடினவர்கள் எல்லாரும் அவைகளை உண்மையாகவே எப்பொழுதும் கண்டடைந்தார்கள் என்பதை மறந்துவிட்டார்கள். ஆனால் இப்போதுதான் மேற்கு தேசத்தார்கள் இவைகளை உண்மையாகத் தேட ஆரம்பம் செய்கிறார்கள். அனேக நூற்றாண்டுகளாக ஐரோப்பாக் கண்டத்தவர்கள் பெரும்பாலும் மிகுந்த மூடபக்தியில் அமிழ்ந்து, அதிலேயே திருப்தியடைந்திருந்தார்கள். மூடபக்தியினால் உண்டான கொள்கைகளின் புத்தி யீனத்தையும் வெறும் முரட்டுப் பிடிவாதத்தையும் உணர்ந்து அதற்கு விரோதமாக புத்திமான்கள் ஆக்ஷேபிக்கவே அந்த மூடபக்தியும் போய் நாஸ்திகவாதமும் கொஞ்சக் காலமாக மேலிட்டுத் தலையெடுத்தது. முன் மூடபக்தி எப்படி நிறைந்திருந்ததோ, அப்படியே இப்போது இந்தநிரீசுவரவாதமும் முரட்டுப் பிடிவாதத்தையுடையதாய், நியாயமான உண்மையை எடுத்துக் கூறுவார்கள் யாரும் இல்லையென்று கர்வம் கொண்டிருந்தது. ஆனால் காலம் செல்லச் செல்ல இப்போது தான் நம்மவர்களுக்குள்ளும் சிலர், நியாயத்திற்குக் கட்டுப்பட்டவர்களும், தாழ்மையுள்ளவர்களுமாய்த் தங்களுக்கு ஒன்றும் தெரியாதென்றும் ஒத்துக்கொண்டு, வேறே எங்கேயாவது உண்மையான சங்கதி கிடைக்காதா வென்று தேடி விசாரிக்க உண்மையாகவே இப்போதுதான் ஆரம்பம் செய்கிறார்கள்.

இவ்வாறு நியாயமாக விசாரணை செய்ய விரும்புகிறவர்கள் இன்னும் கொஞ்சம் பேர்களேயானாலும், இவர்களை எல்லாம் ஒன்றாகத் திரட்டிச் சேர்த்து, இஷ்டமுள்ளவர்கள் மெய்ஞ்ஞான புத்தகங்களை வாங்கிப்படித்து,

அவைகளில் சொல்லும் விஷயங்களைக் குறித்து நன்ருய் ஆலோசித்து, அரிய பெரிய உண்மைகளை உணர்ந்து, உய்யு ம்படி வேண்டிய ஏற்பாடு செய்ய மெய்ஞ்ஞான சபையொ ன்று நிர்மிக்கப்பட்டிருக்கின்றது. இச்சபையின் கருத்து, இவ்விஷயங்களை அறிய விருப்ப மில்லாதவர்களைப் பலவந் தப்படுத்தும்படியாகவல்ல, இஷ்டமுள்ளவர்கள் இவ்வாரா ய்ச்சி அவசியமென்று உணரும் பட்சத்தில் தாங்களே சுய மாக விசாரணை செய்யும்படி இவ்வுண்மைகளை வெளிப்படு த்துவதேதான். நாமோ முரட்டு மத வைராக்கியத்தால் ஒருவாறு உன்மத்தங்கொண்ட பாதிரிமார்களைப் போலா காது, யாரும் தங்கள் தங்கள் சாமானிய அறிவை இழந்து விடாமல் மேலும் அவர்களைப்போல எங்கள் கொள்கை களை அவசியம ஒத்துக்கொள்ளவேண்டும்; இல்லாவிட்டால் சதாகாலமாக நரகத்தில் விழுந்து கிடக்க வேண்டும் என்று சொல்லும்படியான மயக்கத்தில் கொஞ்சங்கூட அகப்படா மல் இருக்கின்றோம். இன்னும் உண்மையை அங்கீகாரம் செய்ய மனமில்லாதவர்களுக்கும், ஆசையுடன் அங்கீகாரம் செய்கிறவர்களுக்கும், எல்லாருக்கும் கடைசியாகக் காரியங் கள் அநுகூலமாகவே முடியும் என்னும் விஷயத்தை நன் ருய் அறிந்திருக்கிறோம். ஆகையால், இந்த உண்மையை அறி ந்திருக்கிறதினல் நாமும் ஆயிரக்கணக்காக மற்றவர்களும் ஜீவியத்தில் நேரிடும் கஷ்டங்களைப் பொறுமையுடன் அநுப விக்கவும், மரணத்தைச் சாந்த முகத்தோடு சந்திக்கவும், சக்தியுடையவர்களாய் இருக்கின்றோம். இந்த நன்மைகளை எல்லாம் மற்றவர்களும், எல்லாரும், அடையவேண்டுமென் றும் விருப்பங்கொண்டிருக்கிறதினுலேதான், இந்த விஷயங் களைப்பற்றிப் புத்தகங்கள் எழுதி வெளிப்படுத்தவும் அவை களைக் குறித்தே எங்கும் உபந்யாசங்கள் செய்யவும் ஊக் கங்கொண்டு ஒழுகுகின்றோம்.

இந்தப் பெரிய உண்மைகள். ஆயிரம் ஆயிரம் வருஷங் களாக எங்கும் சுருக்கமாகத் தெரிந்திருக்கின்றன. மேற்

குத் தேசத்தவர்களாகிய நாம் தானே மட்டுக்கு மிஞ்சி போதும் என்னும் மனமுடையவர்களாய் இருந்ததினால், அவைகளைக் குறித்து இது வரைக்கும் ஒன்றும் அறியாமலும், ஏதாவது தற்செயலாய் அவ்விஷயங்களைக் குறித்துச் சில குறிப்புகள் கிடைத்தபோதிலும், அவைகளை அசட்டை செய்து, அவமதித்து இகழ்ந்துவிட்டோம். ஆத்தும வித்தை விஷயத்திலும், மற்றச் சாஸ்திரங்களில் இருக்கிறது போலவே, தாங்கள் ஜீவியகாலத்தை அதன் விசாரணைக்கென்று உபயோகிக்கிறவர்களுக்குத் தான் காரியங்கள் எல்லாம் வெகுவிவாமாக முழுவதும் தெரியவரும். இதை முழுதும் நன்றாய் அறிந்த நிபுணர்கள், பூரணமாக விசாரணை செய்து, நன்கு உணர வேண்டியதற்கு அவசியமான சகல சக்திகளையும் தங்களுக்குள்ளேயே வெகு பொறுமையுடன் விருத்தி செய்திருக்கிறார்கள். ஏனெனில், இந்த விஷயத்தில், தற்காலத்து பதார்த்த சாஸ்திரவிசாரணையின் முறைகளுக்கும், இரகசிய ஆத்தும வித்தை விசாரணை முறைகளுக்கும் வித்தியாசம் உண்டு. முந்தியது தன் சக்திகளை எல்லாம் சாஸ்திர விசாரணைக்கு வேண்டிய கருவிகளைக் கருத்துடன் விருத்தி பண்ணுவதிலும், பிந்தியதோ, விசாரணை செய்கிறவனே விருத்தியடைய வேண்டுமென்னும் விஷயத்திலும் நிலைத்து நிற்கின்றது.

## விசாரணை முறை

வேண்டிய விருத்தியைப் பற்றி இச்சிறு புஸ்தகத்தில் விஸ்தாரமாகச் சொல்லமுடியாது. வேண்டியமட்டும் விரிவாக வேறே மெய்ஞ்ஞானப் புத்தகங்களில் கண்டறிந்து கொள்ளலாம். ஆனால் இங்கே வெகு சுருக்கமாகக் கூறவேண்டியதினால் சகலமும் சலன விர்த்தியைச் சார்ந்து நிற்கும் என்று சொல்வதே போதும். வெளி லோகத்திலிருந்து மனிதனுக்குச் சேரவேண்டிய சகல சங்கதியும் ஏதோவொரு விதமான சலன ரூபமாகவே ஏற்படுகின்றன. கண்

ணின் வழியானாலும் சரி, காதின் வழியானாலும் சரி, உடம்பின் மூலமாகவானாலும் சரியே, எல்லாம் சலன ரூபமே தான். இந்த நியாயத்தை அனுசரித்துத்தான் மனிதன் வேறு சலன சக்திகளைக் கிரகிக்கக் கூடியவனானால், அவன் அப்போது வேறு சங்கதிகளை அறியக் கூடியவன் ஆகின்றான். அவன் அப்போது சூக்ஷ்ம பார்வையுள்ளவன் ஆகின்றான்.

இந்த வார்த்தையினால், சாதாரண பார்வையை விடக் கொஞ்சம் அதிகமான பார்வையைக் கொண்டு அதிக சூக்ஷ்மமான பொருட்களைப் பார்க்கக் கூடியவன் ஆகின்றான் என்பதே கருத்து. ஆனால் மனிதன் அதி சூக்ஷ்மயான சலன நகர்ச்சியினால் அதிகமதிகமாக அதி சூக்ஷ்ம விஷயங்களை அறிந்து, விருத்தியடைந்த அனேக சக்திகளைக்கொண்டு மேலும் மேலும் சுயமாகவே தாராளமாக உயர்ந்த காரியங்களை எல்லாம் புதிதுபுதிதாகக் கண்டறிய சக்தியுள்ளவனாகிறான். இவ்விதம் அவன் தனக்கு இதுவரைக்கும் தெரியாதிருந்ததும், தான் கொஞ்சமாக அறிந்த லோகத்திற்குச் சேர்ந்த புதுப்பாகங்களை அறியக் கூடியவனாய், இவ்வாறு தன்னைச் சுற்றிலும் தன் ஜீவியகாலமெல்லாம், தான் கண்டறியாத விசாலமான பிரபஞ்சமொன்று உண்டென்று உணருவான். ஆகவே தனக்குத் தெரியாமலே தன்னோடு அனேக விஷயங்கள், அனேகவிதமாக இடைவிடாது சம்பந்தப்பட்டுக் கொண்டே இருக்கின்றனவென்று அறிவான். ஆனால் இவைகள் அறிந்து கொள்ளும்படி தனக்கு வேண்டிய சக்திகளை எல்லாம் தன்னிடத்தே ஒருவன் விருத்தி பண்ணிக் கொள்ளுவானானால் அவ்விஷயங்கள் யாவற்றையும் பதார்த்த சாஸ்திர விசாரணைக் கிரமப்பிரகாரமாகவே விசாரித்து அவசியம் நேரிடும் போதெல்லாம் அவைகளை மறுபடியும், மறுபடியும் விசாரணைசெய்து தன் அனுபவத்தை மற்றவர்களுடைய அனுபவத்துடன் சேர்த்துப் பல பல விஷயங்களை எல்லாம் நிதானித்து யூகித்தறிந்து, தேறும விவரங்களுக்கு வேண்டிய மட்டும் அட்டவணையிட்டு வைத்து, அவைகளினின்று வேறே நூதனமான யூகங்களையும் தெரிந்துகொள்ளுவான்.

(இன்னும் வரும்.)

வள்ளலார், பரஞ்சோதியார்.

# பிரஹ்மஞான தரிசனம் (பாலபாடம்.)

## 12-வது அத்தியாயம்.

### மந்த்ர வித்தை.

---

மந்த்ரம்! இது என்ன ஆச்சரியமும் பயங்கரமுமான வார்த்தை! அந்தவார்த்தையை உச்சரித்தவுடன் ஒவ்வொருவருடைய மனதிலும் என்ன தோற்றங்கள் உண்டாகின்றன? சிலர் மனதில் ஏதோ ஒரு தேவதை அல்லது பூதம் அல்லது பிசாசை ஒருவன் மந்த்ர உபாசனையினால் வசப்படுத்தி அதன் மூலமாய் வேறொருவனுக்கு நன்மையோ தீமையோ விளைவிக்கிறான் என்ற எண்ணம் உண்டாகிறது. வேறு சிலர் மனதில் மந்த்ரமென்பது சில வார்த்தைகளின் சக்தி. அதனால் அனேக வித்தைகள் வேடிக்கைகள் செய்கிறான் என்ற எண்ணமுண்டாகிறது. இது ஆச்சரியமல்லவா? தூரத்திலிருந்து பயங்கரமான விஷயங்களைப் பார்க்கிறதும் அவைகளை நாம் கோரினாலொழிய அவைகள் நம்மை அணுகமாட்டாவென்று நினைப்பதும் இயல்பே.

மந்த்ரமென்ற வார்த்தையைக் கேட்ட மாத்திரத்தில் இவ்வித எண்ணங்கள் நமக்கு உண்டாகின்றன. அப்படியிருந்தும் இவ்வெண்ணங்களை நம்முடைய மனதின் ஓர் மூலையில் வைத்துக்கொண்டு சில சமயங்களில் அது பொய்யென்றும் ஏமாற்றுகிற வித்தையென்றும் நினைக்கிறோம். நமக்கு கஷ்டம் அல்லது துன்பம் நேரிடுகிற வேறு சில சமயங்களில் மந்த்ரம் உண்மையாயிருக்கலாமென்றும் அதன் சக்தியாலாவது அதன் மூலமாய் உச்சாடனம் செய்யப்படும் தேவதையினாலாவது நமக்கு நன்மையுண்டாகும். நம்முடைய கஷ்டங்களும் துன்பங்களும் நிவர்த்தியாகுமென்றும் நம்புகிறோம்.

இவ்விதம் சஞ்சலப்படுகிற நமக்கு பிரம்மஞானம் ஒரு ஆறுதலைக் கொடுக்கிறது. மந்த்ரமென்பது உண்மையென்றும், மனிதனே பெரிய மந்த்ரவாதியென்றும் இக்காலத்தில்

அவன் மந்த்ரத்தின் சக்திகளை மறந்துபோய் அதன் பிரயோசனத்தை யறியவில்லையென்றும் போதிக்கிறது.

மந்த்ரமென்ற சொல்லுக்கு அர்த்தம்—தேவதை பூதம் பிசாசுகளின் உதவியால் உலகத்திலுள்ள அனேக ரகசியங்களை அறியலாமென்று பாசாங்கு செய்கிற ஒரு சாஸ்திரமென்றும்; அந்த வார்த்தையானது மந்த்ரவாதி என்ற பொருளுள்ள மாகஸ் என்னும் லத்தீன் வார்த்தையிலிருந்தும், மந்த்ரமென்றபொருளுள்ள மாகியாவென்னும் கிரேக்க வார்த்தையிலிருந்தும் வந்திருக்கிறதென்றும் ஆங்கில அகராதிகள் கூறுகின்றன. ஆனால் "பாசாங்கு செய்கிற" என்றசொற்களை எடுத்துவிட்டால் மேற்சொன்ன அர்த்தம் பொருந்தும்.

மேலே சொன்ன அர்த்தம் தவிர வேறு அர்த்தங்களும் அதற்குண்டென்று பிரஹ்மஞானம் கூறுகின்றது ஸம்ஸ்கிருதத்தில் மந்த்ரமென்பதற்கு மகத்என்று பொருள் மேலே சொன்ன லத்தீன் கிரேக்க வார்த்தைகளுக்கும் அதே அர்த்தம்தான். ஆகையால் மந்த்ரமென்பது மகத் அல்லது தெய்வீக சாஸ்திரமென்று பொருள். ரசவாதம் போல அதுவும் இரண்டு விதம். அதைப் பிரயோகம் செய்கிறவனுடைய கருத்தைப் பொறுத்து தெய்வீக மந்த்ரமென்றும் ஆசுர மந்த்ரமென்றும் இரண்டு வகுப்பாய் இருக்கிறது.

தெய்வீக மந்த்ரம் உத்கிருஷ்டமானதும் பிறருக்கு நன்மையைக் கொடுக்கக் கூடியதும் மிகவும் அழகுள்ளதுமாயிருக்கிறது. ஆசுர மந்த்ரம் பிறருக்குத் தீமையை விளைவிக்கிறதும் கெடுதலும் அருவருப்புமுள்ளது. அவையிரண்டும் பாசாங்குமல்ல மனோராஜ்யமுமல்ல. இரண்டும் உண்மையே. அவைகளைப் பற்றி நாம் தெரிந்துகொள்ளாததினால் அவைகளின் சக்தியை நாம் உணரவில்லை.

இக்காலத்தில் அனேக ஜனங்களும் ஜாதியார்களும் மந்த்ர விஷயங்களை மறந்துவிட்டார்கள். அதினால் மந்த்ரத்

தை நம்புவது பரிகாசத்துக்கு ஹேதுவென்றும் நினைக்கிறுகள். நம்முடைய கொள்கையாவது—உண்மைக்கு மேலான மதமில்லை என்பதும், நம்முடைய சக்திக்கு எட்டினவரை நாம் சகலத்தையும் கற்றுக்கொள்ளவேண்டுமென்பதுமாம்; ஒன்றுஉண்மையென்று நாம் அறிந்தால் அதை தைரியமாய் வெளிப்படுத்தவேண்டுமென்பதுமாம்.

ஒவ்வொரு குழந்தையும் மனிதனும் ஸ்திரீயும் மெதுவாய் ஆனுல் நிச்சயமாய் தெய்வீக மந்த்ரவாதியாகவோ ஆசுர மந்த்ரவாதியாகவோ ஆய்க்கொண்டு வருகிருர்கள். இன்னபாதையில் போகிருர்களென்பது அவரவர்கள் கருத்தைப் பொறுத்திருக்கிறது.

சிலருக்குத்தான் இந்தவிஷயம் தெரியும், அப்படித்தெரிந்தவர்கள் எந்த மார்க்கத்தையனுசரித்தாலும் அந்தமார்க்கத்தில் மற்றவர்களை விட அதிக ஊக்கத்துடன் வேலை செய்கிருர்கள்.

ஆசுர மந்த்ரவாதி சரீரங்களின் சக்திகளைக்கொண்டும் தெய்வீக மந்த்ரவாதி மனேசக்தி, ஆத்மசக்திகளைக்கொண்டும் வேலை செய்கிருர்கள்.

வி. வெங்குசாமி அய்யர்

---

## நன்மொழி

---

சமையம் பல சுத்தித் தன்செய லற்றிடு
மமையும் விசேடமு மான்மந்தி ரசுத்தி
சமைய நிருவாணங் கலாசுத்தி யாகு
மமைமன்னு ஞானமார்க் கம்மபி டேகமே.

—திருமந்திரம்.

294

# சாந்தம்.

சாந்தமென்பது ஒரு வடமொழிப் பதம், அதற்கு அமைதி என்பது பொருள். இங்கில வுலகத்திற்றோன்றி விளங்கி சுகத்தி னூக்கத்தையே யவாவி முயன்றுவரும் இயல்பினையுடைய மனிதர்களின் செயல்களும் மொழிகளும் செம்மையாயிருத்தல் வேண்டும். சீலமும் அமைதியுமே சிவர்கட் குறுதியாதலின் பதிநலம் வாய்ந்த நாம் ஒவ்வொருவரும் பிரதானமான இந்திரியமாகிய மனம் அமைதி பெறப் பழகிவரல்வேண்டும். அமைதியானது ஆழ்ந்து தெளிந்த அறிவினைப் பயக்கும். இத்தகைய அறிவினால் அளவிலா நலங்கள் பலவுமெய்தி யானந்தமுறலாம். வீணை பிடில் முதலிய இசைக் கருவிகளிற் பிணிக்கப் பட்டுள்ள தந்திரிகளிலிருந்து இசை யெழுவதுபோல சாந்தமென்னும் சற்குணத்திலிருந்து ஞானமெழுகின்றது. பரம புருடார்த்தமாகிய மோக்ஷத்தை யடைதற்குப் பரம சாதனமாயுள்ள ஞானத்தையே நல்குந் தானத்தையுடைய சாந்த குணமே தன்னையுடையானுக்கு எல்லா நலங்களையுந் தந்து என்றுங்குன்றா இன்ப வாழ்வினை யளிக்கின்றது. இஃதொன்றே யிவ்வுலகத்தைத் தன் வசமாக்கி நிற்கின்றது. இவ்வுலகத்தில் செய்யப்படுவன வெல்லாம் பின் அநுபவத்தில் காணப்படுகின்றன. அநுபவமாவது முயற்சியாலாக்கப்பட்டுக் காலக்கழிவில் பூர்த்தியாகின்றது. நம்முடைய மனம், மொழி, மெய்கள் தொழிற்படுமுன்னரே யத்தொழிலின் றகுதியையும் அதனாற் போதரும் பயனையும் ஆழ்ந்தாழ்ந்து நலமுறத் துணிதல்வேண்டும். மதி நலமும் மனவலியு முடையார்க்கே இத்தகைய ஆராய்ச்சி கைவரும். இங்ஙனம் ஆராயும் அமைதியாளரே இவ்வுலகினுக்கோர் திலகமென இலகுவார். அன்னவர் மதிநலமே பின்னுள்ளார்க்கெல்லாம் மதி நலம்போல் தண்ணளி யுதவிக் கண்ணியம் பெறுகின்றது. ஒன்னார்த்தெறலும் உவந்தாரையாக்கலும்

கூற்றங் குதித்தலுங் கைக்கூட்டும். ஆற்றல் சால் சற்றருந் தவமும் சாந்தஞ்சார்ந்து தன்னொளி பரப்புமெனின் இதன் பெருமை யென்னுவியம்புந் தரத்ததோ! காந்தனை யில்லா ஏந்திழை நலமும், தாயினையிழந்த சேயினின் வளமும், பல்லில்லார் தம்மெல்லிய போஜனசுவையும், சாந்தகுணமில்லார் தவமும் அவமாம் என்பதுண்மை நூற்றுணிபு. இஃதொன்றே உயிர்க்குற்ற துணையாய்ப் பாதுகாத்தலிற்கு முயர்வுடையது. கோபந்தோன்றிய காலத்தில் ஒரு மனிதனுடைய தேக நிலைமையையும் சாந்தகுணம் தலையெடுத்து நிற்கும் பொழுது அவனது நன்முகத்தையும் உற்று நோக்குவோமாயின் இச்சாந்த குணத்தின் தனிப்பெருமை தெற்றென வெளியாம். கோபந் தோன்றினவுடனே தேகம் நிலை தளர்ந்து பிராணசக்தி பாழ்படுவதை நம்முடைய அனுபவத்தினறிகின்றோம். பிராணசக்தியை வீணே கழிந்துபோக விடாமல் தடுத்து நிறுத்தி நமக்கே யுரியதாக்கி நாம் பெரும் பயன் பெறச்செய்யும் பெற்றி வாய்ந்துள்ள சாந்த குணமே மாந்தர்க்குற்ற நற்றுணை.

(இன்னும் வரும்.)

ஜகவீரபாண்டியன்.

---

## நன்மொழி

---

தடுங்கோண் மனத்தை விடுங்கோள்
வெகுளியைத் தானமென்றும்
இடுங்கோளிருந்தபடி யிருங்கோ
ளெழுபாருமுய்யக்

கொடுங்கோபச் சூருடன் குன்றந்
திறக்கத் தொளைக்கவை வேல்
விடுங்கோனருள் வந்து தானே
யுமக்கு வெளிப்படுமே

## சிறுவர்க்குரிய விஷயம். *

### சாந்த மென்பது பலஹீனமல்ல.

"அளவுக்கு மிஞ்சினல் அமுதமும் நஞ்சாம்" என்பது பழமொழி. எந்தக் கார்யத்திலும் அளவுக்கு மிஞ்சியே நடப்பது வெகு இலகுவானாலும் தீயது. எந்த நற்குணத்தையும் அதிகதூரம் நினைக்கப் புகுந்தால், அதுவே துர்க்குணமாகும். உதாரணமாக, சிரமப்பட்டுப் படிப்பது நல்லதுதான். ஆனல் விளையாடக்கூட சாவகாசம் இல்லாமல் படிப்பது அறிவின்மையேயாம். திட நிச்சயத்தோடு இருப்பது நல்லதுதான். ஆனல், அதிகதூரம் கொண்டுபோய், அதை அக்கிரமமான முரட்டுப்பிடிவாதமாக்கிவிடலாகாது. புஷ்பங்களிடத்தும் மரஞ்செடி கொடிகளிடத்தும் அபிமானம் மிக நல்லதே. அவைகளை நன்றாய்ப் பரிபாலிப்பது அவசியமே. ஆயினும், எப்போது பார்த்தாலும் தோட்டத்திலேயே உட்கார்ந்துகொண்டு மற்ற முக்கிய கடமைகளைக் வனிபாதிருத்தில் உதவாதல்லவா? நமது வாழ்நாளில எல்லாவிதமான வேலைகளும் கடமைகளும் நிறைந்துள்ளன என்பதையும், அதற்கேற்ற, நேர் நிறையான குணங்களோடு கூடியவர்களாய் நாமிருத்தல் வேண்டுமென்பதையும் நன்கு ஞாபகத்திற் கொள்வோம்.

"என்னையா இது! அளவுக்கு மிஞ்சி சாந்தமாயிருந்தால் அதனின்று எப்படி தீமை விளையக்கூடும்?" என்று பலர் சந்தேகிப்பார்கள். முற்றிலும் சாந்தமாயிருப்பதாக எண்ணங்கொண்டு, பிறர் விஷயத்தில் தலையிடுவானேன் என்று பலர் பேசாமலிருக்கிறார்கள். பிறருக்கு அவர்கள் உதவியும் செய்கிறதில்லை, கெடுதலும் செய்கிறதில்லை. இப்படிச் சும்மாவே தனித்திருப்பதால், தைர்யம் குறைந்தவர்களாயிருக்கிறார்கள். தைர்யங் குறைந்தவர்கள் தொந்தரவு

---

* இது நியூஸீலண்டு ஸ்வர்ண மணிமாலைப் பத்திரிகையிலிருந்து மொழி பெயர்க்கப் பட்டது.

கள் வரும்போது பலஹீனத்தால் பின் வாங்குகிறார்கள். இத்தகையவர்களைத் தான் கோழை மனத்தவர் என்றும் சொல்கிறோம். பிறர் மனத்தை எங்கு நோகச் செய்துவிடுவோமோ என்று நினைத்து, பிறரிடம்போய் ஆகவேண்டிய கார்யங்களில் இவர்கள் முயற்சிக்கிறதேயில்லை. ஆகையால் பொறுப்பான வேலைகளை இப்படிப்பட்டவர்களிடம் ஒப்புவிக்கக் கூசுகிறோம். எல்லாவற்றிலும் அதிக சாந்தமாகவே இருந்து, இவர்களிடம் தாமஸபுத்தியும், கோழை மனமும் தான் அதிகமாயுள்ளன. புத்திக் கூர்மையும் பரபரப்பும், திடசித்தமும், சாந்தத்தைப் போலவே அவ்வளவு அவசியம் என்பதை இவர்கள் மறந்துவிடுகிறார்கள். முதுகெலும்பு இல்லாதவர்களைப்போல், பயந்தவர்களாயிராதீர்கள். எந்த அக்ரமத்தையும், தவறுகளையும், குற்றங்களையும் ஒழித்துச் சீர் திருத்துவதில் தைர்யமாயிருங்கள். பலஹீனமுள்ளவர்கள் எல்லாவற்றிலும் பிரியங்கொண்டபோதிலும் அவைகளைப் பற்றிய முக்யமான உள் விவரங்களையும் கூடக்கவலை உதவாதென்று தவிர்ப்பார்கள். சிரமமாயிருந்தாலும் அவைகளை எப்படியும் அறியவேண்டும் என்ற ஆவல் இவர்கட்கில்லை. இதெல்லாம் சாந்தமாகா. சாந்தமென்பது மந்தமாயிருத்தல் அல்ல. அது ஒருபோதும் பலஹீனமுமல்ல.

பலசாலிகளாயிருக்கிறவர்கள் சாந்தமாயிருப்பது சிரமமென்று உங்களுக்கொருவேளை தோன்றலாம். ஆனால் அப்படியல்ல. உங்கள் பலத்தைத் தவறான வழியில் உபயோகித்து விடுகிறீர்கள். அது பிழையே. பலசாலிகள் தான் சாந்தமாயிருக்கக் கூடும். பட்டணங்களில் வழிதப்பி அலறும் சிறு குழந்தையை போலீஸ்காரன் எவ்விதம் வைத்துக் கொண்டு, அதை ஸமாதானப்படுத்தி நல்ல கதைகளைச் சொல்லி ஏதாவது தின்பண்டம் வாங்கிக்கொடுத்துப் பிறகு விசாரித்துப்பெற்றோர்களிடம் ஒப்புவிக்கிறான். உங்களுக்கு தெரியுமா? எவ்வளவு மெதுவாய் அக்குழந்தை கையை பிடித்துச் செல்லுகிறான்! எவ்வளவு பிரியமாய் அதோடு பேசிக்கொண்டு, கண்ணைத் துடைக்கிறான் பார்த்திருக்கிறீர்களா? இதுதான் சாந்தம். ஏனெனில், அவன் தன் பலத்

தைத் தனக்குள்ளே அடக்கி வைத்துக்கொண்டு, வேண்டிய அளவுமட்டும் உபயோகிக்கிறான். உங்கள் பலத்தை அறிவோடும் அன்போடும் உபயோகிப்பதே சாந்தம் என்று அறிக.

வழ வழவென்று இருப்பவர்களைச் சாந்தர்கள் என்று நினையற்க. அவர்களிடத்தில் உண்மையான சாந்தம் இல்லை. நீங்கள் சாந்தர்களாயிருக்க வேண்டுமானால், பலமுள்ளவர்களாகவும் இருக்கவேண்டும். கிருஷ்ணபகவான் பாலர்களிடத்தில் மிகப் பிரியமாயிருந்தார். எப்படி? அவருடைய பேரறிவையும் பலத்தையும் பாலர்களைப் பயமுறுத்துவதற்காக உபயோகித்தாரில்லை. அப்பாலர்களுக்கு உபகாரம் செய்வதற்கே தம் பலத்தையும் பேரறிவையும் உபயோகித்தார்.

ஆஸ்பத்திரிகளில் வியாதியாய்க் கிடப்பவர்களுக்கு வைத்யம் செய்பவர் எவ்வளவு சாந்தமாயிருக்கிறார்! அவர் முரட்டுத்தனமாக ஒன்றுஞ் செய்வதில்லை. கடிந்து ஓர் வார்த்தை பேசுவதுமில்லை. வியாதியால் நொந்து மெலிந்த சரீரத்தை வெகு சாவதானமாயும் மெதுவாயும் தூக்குகின்றார். அவருடைய அமைதியான நன்மாதிரிகளும் வேலைத்திறமும் வலியை ஆற்றி வியாதியைத் துறத்துகின்றன அல்லவா? அவர் எத்தனையோ புஸ்தகங்களையும், எத்தனையோ பாடங்களையும் படித்திருக்கிறார். சாமான்யர்களைக் காட்டிலும், வியாதிகளையும், அவைகளின் சிகிச்சை முறைகளையும் நன்கு அறிந்தவர். அதனால் தான் அவ்வளவு நன்மை செய்ய அவருக்கு இயலுகின்றது. அவருக்கு அறிவின் பலம் இருக்கிறபடியால், அதை உபகாரமான வழியில் செலுத்துகிறார். அவருடைய சாந்தம், அன்பு, தன்னடக்கம், அறிவு இம்மூன்றினாலுமல்லவா ஏற்பட்டது? நீங்களும் சாந்தமாயிருக்கவேண்டியவர்கள் தான். அவ்விதமிருப்பதற்கு, பிறருக்கு உபகாரம் செய்ய ஆவலோடிருத்தல் மட்டும் போதாது. அறிவோடு உபகரிப்பது எப்படி என்பதையும் கற்றுக்கொள்ளவேண்டும்.

வஸந்தா நந்தன்.

303

# முக்கிய அறிவிப்பு.

‘𑌮𑌾𑌸𑌾𑌨𑌾𑌂 𑌮𑌾𑌰𑍍𑌗𑌶𑍀𑌰𑍍𑌷𑍋𑌽𑌹𑌮𑍍’

“மாதங்களுக்குள் மார்கழி மாஸமாக இருக்கிறேன்” என்று ஸ்ரீ கிருஷ்ண பகவான் கூறியுள்ளார். இதற்கு தக்க நியாயங்கள் அநேகம் இருப்பதோடு, பின் வருவனவற்றையும் உத்தேசிக்க, இது உண்மையாயிருக்கிறது.

வழக்கம்போல, வருகிற டிஸம்பர்மீ கிரிஸ்ட்மஸ் வாரத்தில், நமது பிரஹ்மஞ்ஞான மஹா ஸதஸ் லக்னௌ என்ற லக்ஷ்மணபுரியில் நடப்பதோடு நாஷனல் காங்கிரஸ் முதலிய பல மஹாஸதஸ்கள் ஸ்வதேச க்ஷேம அபிவிருத்தி முறைகளைத் தீர்மானிக்கவும், இதுவரை அவ்விஷயத்தில் உழைத்து வந்த பல பெரியாரின் அநுபவங்களைப் புதிது புதிதாக வெளியிடவும் கூடுகின்றமையால், நம்மவர் எல்லோரும் நமது முக்கிய கடமையாகக்கொண்டு, ஒரு சிறிதுகூட சிரமத்தைக் கருதாது அந் நகருக்குப் புறப்படவேண்டும். இக்காலத்திற்கு இதுவே சிறந்த யாத்திரையாகும். முற்காலத்துச் சிறந்த யாத்ராஸ்தலங்களெல்லாம் நல்ல ஆலயங்களையுடையதாயிருந்தன, பரிசுத்தமாயிருந்தன. எப்படியெனில் அகத் தூய்மையுள்ள பூஜகர்களால் நடைபெற்ற அர்ச்சனைகளால் என்று கூறலாம். ஈசுவர வழிபாட்டின் பழைய முறைகள் உலைந்துபோயின. முற்காலங்களிற் பரிசுத்தர்களை ஆலயங்களிலும், மடங்களிலும், ஆச்சிரம விடுதிகளிலும் தரிசித்து வந்தோம். இக்காலத்தில் அத்தகைய பரிசுத்தர், பொதுநலங் கருதி உழைக்கும் மஹா ஸபைகளோடு சேர்ந்து, உழைக்கிறாரானமையால், அவர்களை இச் சமயங்களிலேயே தரிசிக்கலாம். இக்காலத்தில் ஈசுவர வழிபாடென்பது ஸ்வதேசாபிமானங் கருதிப் பொது ஜந க்ஷேமத்திற்கு உழைத்தலேயாம்.

“நல்லோரைக் காண்பதுவு நன்றே”

“𑌸𑌾𑌧𑍂𑌨𑌾𑌂 𑌦𑌰𑍍𑌶𑌨𑌂 𑌪𑍁𑌣𑍍𑌯𑌂”

என்று ஆன்றோர் கூறியுள்ளார். ரதோத்ஸவம் முதலிய திருவிழாக்களில் இவர்களை இக்காலத்திற் காண்பதரிது. ஆதலால் லக்ஷ்மணபுரி போய் நமது நாநாவித கடமைகளில் முக்யமானதாகிய ஜநஸமூஹ நன்மையை நம்மாலியன்றமட்டும் செய்யுமாறு வேண்டிக் கொள்கிறேன்.

B. S. ராமசுப்பையர்.

304

## சமாசாரம்.

சென்றமீ 15உயன்று உதயதிசை நக்ஷத்ர ஸங்கத்தின் சித்தூர்க் கிளைச்சபை அதன் இரண்டாம் வருஷோற்சவம் கொண்டாடியது. பம்பாய் ஹரிஜீவனஹலிதாஸ்மேடா அவர்கள் அச்சமயம் அக்ராஸநம் வகித்தனர். அதோடுகூட "பூர்ணம்பெற்ற மனிதன்" என்ற ஒரு உபந்யாஸமும் செய்தனர். சித்தூர் ஹைக்கோர்ட் வக்கீல் ஸ்ரீமத் பார்த்தசாரதி ஐயங்காரவர்கள் லோககுருவின் வரவைப் பற்றிப் பேசினர். கடைசியில் மஹந்துஸ்கூல் ஹெட்மாஸ்டர் ராகவாசார்யரவர்கள் (பி. ஏ., பி. எல். யல். டி.) வந்தனமளித்தனர். வந்திருந்த பொது ஜனங்கள் சிரத்தையோடு கேட்டானந்தித்தார்கள். அநேகர் நக்ஷத்ர ஸங்கத்திலும் சேர்ந்தார்கள். பம்பாயைச் சேர்ந்த பார்ஸீ ஸஹோதரர் ஒருவரும் மேடா அவர்களுடன் வருஷோத்ஸவத்திற்கு வந்திருந்தார்.

---

கோட்டயம் "கௌதம லாட்ஜ்" என்ற பிரஹ்மக்ஞானக்கிளைச்சபையில் தமிழ்ஜில்லா தியஸாபிகல் லாட்ஜ் இன்ஸ்பெக்டர் பிரஹ்மஸ்ரீ பி.ஆர் சுந்தரராஜ ஐயரவர்கள் சென்றமீ 8,9-ஆம் தேதிகளில் முறையே பக்தியைப் பற்றியும், பிரஹ்மவித்யையைப் பற்றியும், உபந்யசித்தார்கள். 9-ஆம்தேதி இரவு 8-மணிக்கு உதயதிசை நக்ஷத்ர சங்கத்தார்க்கு ஒரு உபந்யாஸமும் செய்தார்கள். அநேகர் போய்க் கேட்டானந்தித்தார்களாம்.

---

மதுரை பிரஹ்மக்ஞானக் கிளைச்சபையில், பழைய வழக்கப்படி சென்ற மாசம் நான்கு ஞாயிற்றுக்கிழமைகளிலும், நான்கு உபந்யாஸங்கள் நடைபெற்றன. பிரஹ்மஸ்ரீ வி. விசுவநாத ஐயரவர்கள் ரிஷிகளைப்பற்றியும், பி. எஸ். ராமசுப்பையர் "லோககுருவாகிய பரமன் வரவானேன்" என்ற விஷயமாய் ஸ்ரீமான் லெட்பீடரவர்கள் எழுதியுள்ளதின் தமிழ் மொழிபெயர்ப்பை வாசித்தும், ஷை லாட்ஜ் பிரஸிடெண்ட் பிரஹ்மஸ்ரீ அ. ரங்கஸ்வாமி ஐயரவர்கள் "மைத்ரேய மஹரிஷியை"ப் பற்றியும், மறுபடி வி. விசுவநாதையரவர்கள் "த்ரிகரண சுத்தியை"ப் பற்றியும் முறையே ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையிலும் உபந்யஸித்தார். மதுரைக் கிளைச்

சபையில் பிரதி காலையிலும் "ஸநாதந ஞானம்" என்று பொருள் படும் ஏன்ஷேண்ட் விஸ்டம் என்னும் கிரந்தத்தை பிரஹ்மஸ்ரீ வி. வெங்குசாமி ஐயரவர்கள் வாசித்து விவரித்து விளக்குகிறார்.

---

சென்ற செப்டம்பர்மீ 23, 24-ஆம் தேதிகளில் நாகப்பட்டினத்தில் தஞ்சாவூர்ஜில்லா கான்பெரன்ஸும், பிரஹ்மக்ஞான கான்பெரன்ஸும், கைத்தொழிற் காட்சியும், வர்ணாசிரம கான்பெரன்ஸும், ஆசார சீர்திருத்த கான்பெரன்ஸும் நடைபெற்றன. தஞ்சாவூர்ஜில்லா கான்பெரன்ஸின் அக்கிராசனபதியாகத்தேர்ந்தெடுக்கப்பட்ட சென்னை ஹைகோர்ட்டு வக்கீல் ஸி. பி. ராமசாமி அய்யரவர்களை நமது நண்பர்கள் நன்கு அறிவார்கள். பிரஹ்மஞான சபையைத் தவிர மாதுஸ்ரீ அன்னிபெஸண்டம்மாளுடைய பல நன் முயற்சிகளில் முக்கியமான உத்தரவாதம் வகித்தவர். அன்னவர் மேற்கூறிய கான்பெரன்ஸில் வெகு அழகாகவும், கம்பீரமாகவும், சபையோர்களால் நன்கு ஆமோதிக்கப் பெற்றதுமான பத்திரிகையை வாசித்தார். அவரது கம்பீரமான பார்வையும், சுறுசுறுப்பும், மரியாதையான மாதிரிகளும், வெகுதூரம் எளிதில் கேட்கும்படி பேசும் திறமையும், எல்லோர் மனதையும் கவர்ந்தது. கைத்தொழில் கண்காட்சியை பரோடா திவான் மகா-ா-ா-ஸ்ரீ வி. பி. மாதவராயரவர்கள் திறந்தார்கள். அக்கண்காட்சியானது மிகவும் ஆச்சரியகரமான விஷயங்களடங்கியதாக இல்லையென்றாலும், கவனித்தவர்களுக்கு தஞ்சாவூர் ஜில்லாவின் சில முக்கிய கைத்தொழில்களைக் காண்பித்தது. கும்பகோணத்தில் நெய்த சேலைகளின் வேலைப்பாடும், வல்லம் கண்ணாடிகள் செய்யும் விதமும், நாகப்பட்டினத்தில் செய்த வெள்ளியிழைத்த செம்பு, தம்பாளங்களும் இன்னும் சில சங்கதிகளும் கவனிக்கத்தகுந்தன. வர்ணாசிரம கான்பெரன்ஸில் டிஸ்டிரிக்ட்டு முன்சீபு பிரஹ்மஸ்ரீ கே. எஸ். ராமஸ்வாமி சாஸ்திரிகள் அழகிய உபந்யாஸம் செய்தார்கள். ஆசார சீர்திருத்த கான்பெரன்ஸில் தஞ்சைஜில்லா டாக்டரும் சர்ஜனுமான ஸி. பி. ராமராவ் அவர்கள் அக்கிராசனம் வகித்தார்கள்.

பிரஹ்மக்ஞான கான்பெரன்ஸுக்கு அக்கிராசனபதியாய் வந்த மாதுஸ்ரீ அன்னிபெஸண்டம்மையவர்களை அவ்வூர் கனதனவான்களும் இன்னும் வந்திருந்த இதரவூர்கள்தனவான்களும் 23வ

காலையில் ரயில்வே ஸ்டேஷனுக்குட் சென்று அவர்களை வாத்யகோஷத்துடன் அழைத்து அவர்களது தங்குமிடத்துக்குக் கொண்டுபோய் விட்டார்கள். அன்று காலையில் 9-மணிக்கு பிரஹ்மஞானத்தைப்பற்றி அரியதோர் உபந்யாசம் செய்தார்கள். "உலகத்தில் தோன்றிய மதங்கள் எல்லாம் ஒன்றுக்கொன்று முரணும் தன்மையனவல்ல. ஏனென்றால் அவையெல்லாம் ஒரே லோககுருவின் உபதேசங்கள். காலதேச வர்த்தமானங்களுக்குத் தக்கவாறு வெவ்வேறு மதங்கள் உண்டாகின்றன. அவைகளில் வற்புறுத்தப்பட்ட தத்துவங்கள் பேதமாகுமேயொழிய எல்லா தத்துவங்களும் ஒவ்வொரு சமயத்திலும் காணப்படுகின்றன. ஆகையால் இவ்வுண்மையை யறிவோமானால் மதாந்தரப் பிரவேசங்களும் அதற்காகச் செய்யும் பிரயத்தினங்களும் குறையும். சமரசத்துவம்தான் பிரஹ்மக்ஞான சபையின் முக்கியகொள்கை. ஒவ்வொரு நாட்டிலும் அந்தந்த நாட்டின் மதத்தின் உண்மையை அந்நாட்டார் நன்கு அறியும்படி செய்வதால், பிரஹ்மக்ஞான சபையானது மிக்க நன்மை புரிந்து வருகின்றது. மேனாட்டில் கிறிஸ்தவர்களுக்குள்கூட குப்தவித்யை அறியப்பட்டு வருகின்றது. இது சந்தோஷகரமான விஷயம். இச்சபையில் ஒவ்வொருவருக்கும் எது தத்துவமென்று தோன்றுகிறதோ அதுதான் அவனுக்கு தத்துவம். ஒருவனுக்குச் சரியாய் தோன்றுவது மற்றவனுக்கும் சரியாயிருக்கவேண்டும் என்று கட்டாயமில்லை இவ்வித சுவாதந்திரம் எக்காலம்வரை யுள்ளதோ அதுவரை பிரஹ்மக்ஞான சபையைவிட்டு பிரஹ்மக்ஞானம் நீங்காது ஒரு அபிப்பிராயத்தை எவ்வளவு கௌரவமுள்ள மனிதன் கொண்டிருந்தாலும், சபையின் அக்கிராசனபதியே கொண்டிருந்தாலும் அதை மற்றவர்கள் ஏற்றுக்கொள்ளவேண்டும் என்ற கட்டாயமே கிடையாது. அதேமாதிரி அக்கிராசனபதி ஒருவிதமான அபிப்பிராயம் கொள்ளக்கூடாது என்றுசொல்ல எவருக்கும்அதிகாரமில்லை. ஸ்வாதந்திரியம் தான் இச்சபைக்கு உயிர்" என்று சொல்லி முடித்தார். "இந்தியாவில் கல்வி" யென்ற விஷயத்தைப்பற்றி 24-ஆம் தேதி சாயங்காலம் ஒரு பெரிய சபையில் பெஸண்டு அம்மையார் மற்றொரு உபந்யாசம் செய்தார். இவ்வுபந்யாசத்தைக் கேட்கவேண்டுமென்ற கூட்டம் முந்திய நாளைவிட இரண்டுமடங்கு அதிகமானது.

"ஜெர்மனி தேசத்தில் வாலிபர்களுக்கு கைத்தொழில்கள், ரசாயன சாஸ்திரம் பௌதிக சாஸ்திரம் முதலியன கற்பித்தலில்,

ராஜாங்கத்தார் மிகுந்த சிரத்தையுள்ளவர்கள். ஆனால் 'காலேஜ்' படிப்பு என்ற உயர்தரப்படிப்புக் கல்லூரிகளில் மாணாக்கர்களுக்கு சுவாதந்திரியம் அதிகமுண்டு. அவர்கள் ஒருவருடன் மற்றொருவர் சண்டையிட்டுக் காயப் படுதலும், சாராயம் குடித்தலும், கட்டுப்பாடில்லாமலிருப்பதும், இங்கிலாந்திலுள்ள கல்லூரிகளிலுள்ள ஏற்பாட்டுக்கு முற்றிலும் விரோதமானது. கீழ்ப்படியப் பழகியவன் தான் அரசாளக் கூடியவனாகையால் இங்கிலாந்திலுள்ள ஒவ்வொரு சிறுவனும் தன் நாட்டைக் காப்பாற்றவும், நாட்டின் சட்டசபையில் அங்கத்தினனாக வேண்டுமென்ற நோக்கமுடையவனாதலால், மாணாக்கர்கள் நடத்தை விஷயத்தில் மிகக்கட்டுப்பாட்டுக்குள்ளாக்கப்படுகிறார்கள். ஆனால் அம்மாணாக்கர்கள் இந்த விஷயங்களைப் பற்றிப்பேசலாம் வாதிக்கலாம் அல்லது சிந்திக்கலாம் என்று நிர்ப்பந்தம் கிடையாது. அமெரிக்கா கண்டத்தில் முக்கியமாய் ஐக்கிய மாகாணங்களில் சர்வ கலாசாலைகள் சிறுவர்களை பயிற்றுவித்தலை மாத்திரம் கடமையாகக் கொள்ளாமல் அச்சர்வகலாசாலையைச் சுற்றியிருக்கும் சகல ஜனங்களுடையவும் வித்தியாபி விருத்தியைத் தேடுதல் தங்கள் கடமையாகக் கொள்ளுகின்றன. சர்வகலாசாலை உபாத்திமார்களும் பிரசங்கிகளும் ரெயில்வண்டியில் ரசாயன சாஸ்திராதி நிரூபண யந்திரங்களுடன் பிறவூர்களுக்குப்போய் அந்த வண்டியை மட்டும் பக்கத் தண்டவாளங்களில நிறுத்தி, அந்தவூர் ஜனங்களை வரும்படி செய்து அவர்களுக்கு நிரூபணங்கள் மூலம் ரசாயன சாஸ்திரத்திலும், வியவசாய சாஸ்திரத்திலும், ஆரோக்கிய சாஸ்திரத்திலும் சாதாரண ஜனங்களுக்குத் தெரியவேண்டிய தத்துவங்களை கற்பிக்கிறார்கள். இந்தியாவிலோ சர்வகலாசாலையானது ராஜாங்கத்தின் ஒரு பிரிவாகிறது. சர்வ கலாசாலையை ஆளும் சபைக்கு 'செனட்' என்று பெயர். அதில் முக்கியமானவர்கள் ஆங்கிலேயர், அவர்கள் நாம் கற்பிக்கும் விஷயம் இந்தியருக்குச் சரியா என்று கவனிக்காமல் இங்கிலாந்தில் வழங்கும் வழக்கத்துக்கு ஒத்திருக்கிறதா என்று பார்க்கிறார்கள். ஆனால் அவர்கள் சொற்பமானவர்கள். ஆனால் ராஜாங்கத்தாரால் நியமிக்கப்படும் இந்தியர்களும், அவ்வாங்கிலேயரையே ஆமோதித்துப் பேசும்படி அவர்களுடைய நியமுகமும் உத்தியோகமும் கட்டுப் படுத்துகின்றன. ஆகையால் மேற்கூறிய ஆங்கிலேயருடைய அபிப்பிராயமே பெரும்பாலும் மேற்கையாயிருக்கிறது. ஆனால் சிலகாளாக உத்தியோகஸ்தர்களும் சர்க்கார் நியமுகமில்லாதவர்களுமான இந்தியர்கள் தீர்க்க

மாய் ஆலோசனை செய்து ஒற்றுமையாய் அபிப்பிராயங்களை வெளியிட்டதால் இந்தியர்களுடைய அபிப்பிராயமானது ஜயிக்க இடமாயிற்று. இனிமேலும் இதேமாதிரி ஒற்றுமையாய் முன் ஆலோசனையுடன் இவர்கள் நடந்தால் க்ஷேமம்தான். ஹிந்து சர்வகலாசாலையில் ஹிந்துக்களுக்கு கூடியமட்டில் சுவாதந்திரியம் இருப்பதால் அவர்கள் நன்றாக காரியங்களை நிர்வகிப்பார்கள் என்று ஆவலுடன் எதிர்பார்க்கப்படுகிறது. எவ்விஷயத்தைப் பற்றி கற்பிக்கவேண்டுமென்று ஆலோசிக்கினும், பௌதிகாதி சாஸ்திரப் பயிற்சியும் இலக்கியப் பயிற்சியும் அவசியம் என்று துணியலாம். மேலும் கல்விக்காகச் செலவுசெய்யும் பணமானது வியர்த்தமில்லை. எவ்வாறு எரி, குளம் வெட்டுதல், அதிக விளைச்சல் முதலிய வருவாயைக் கொடுக்கக்கூடியதோ அதேமாதிரி கல்வி கற்பித்தலால் ஜனங்கள் சம்பாதிக்கும் சக்தி யுடையவர்க ளாகிறார்கள். அதனால் ராஜாங்கத்திற்கு வருமானம் உண்டாகின்றது. மேலும் படிப்பினால் குற்றங்கள் குறையும். காராகிருஹங்களுக்குச் செலவிடும் பணம் குறையும். ஆகையால் இப்போது செலவழிப்பதைவிட அதிகமான கல்வி விஷயமாய்ச் செலவிடவேண்டுவது அவசியம். மேலும், கைத்தொழில்களை யொவ்வொருவரும் கற்கவேண்டும். அதனால் கைத்தொழில் செய்தே யெவனும் பிழைக்கவேண்டும் என்று எண்ணமில்லை. முக்கியமான சகலகாரியங்களையும் தானே செய்யக் கூடிய சாமர்த்தியம் ஒவ்வொரு வாலிபனுக்கும் வேண்டும். தற்போது மாணாக்கர்கள் தங்களுடைய நோக்கங்களையும் சாமர்த்தியங்களையும் அறியும் முன்னமேயே ஒவ்வொரு குறிப்பிட்ட விஷயத்திலும் விசேஷத் தேர்ச்சி யடையவேண்டுமென்று நிர்ப்பந்திப்பது சிலாக்கியமல்ல. இப்போது ஆறாவது பாரம் என்ற உயர்தர வித்யா வகுப்பு தாண்டும்வரை விசேஷப் பயிற்சி ஒரு விஷயத்திலும் இல்லாமல் சாதாரணப் பயிற்சியே யுண்டாகும்படி செய்யவேண்டும். மேலும் எல்லா விஷயங்களையும் தாய் பாஷையிலேயே கற்பித்தல் வேண்டும். அதனால் சீக்கிரமாகச் சிறுவர்கள் கற்பினையை கிரஹிக்க முடியும். ஆனால் ஆங்கில பாஷையைச் சம்பாஷணை மூலமாகவும் கதைகள் சொல்லுதல் மூலமாகவும் கற்பித்தலவசியம். புஸ்தகரூபமாய் கற்பித்தல் சிரமமாகும். எல்லா வற்றிற்கும் முதன்முதல் கிரஹிக்கவேண்டியது என்னவெனில், ஒவ்வொருவனுடைய குணமும் நடத்தையும்தான் முக்கியமான சொத்து. அதை விருத்தி செய்வதற்கு அவனுக்கு அவனுடைய மதத்தைப்பற்றிக் கற்பித்தல்

அவசியம். இதை யொருவரும் மறக்கக்கூடாது." இவ்வாறுசொல்லிய உபந்யாசத்தை அச்சபையிலுள்ளவனைவரும் மிக்ககவனமாய்க் கேட்டார்கள். அதனால் மிகுந்த பயனடைந்தார்கள் என்பதில் சந்தேகமில்லை.

தஞ்சாவூர் ஜில்லாவில் உள்ள ஜனங்கள் இதர ஜில்லாவிலுள்ளவர்களைக் காட்டிலும் புத்திக் கூர்மையில் மேலானவர்கள் என்பது பிரசித்தம். அவர்கள் பிரஹ்மக்ஞான புஸ்தகங்களைப் படிப்பதில் மிக்க அவாவுள்ளவர்களாகக் காணப்பட்டார்கள். மதுரையிலிருந்து கொண்டுபோன தமிழ் பிரஹ்மக்ஞான புத்தகங்களில் அநேகமாய்ப் பெரும்பான்மை முதல்நாள் சாயங்காலத்துக்குள் விற்றுப் போயின. இது மிகவும் சந்தோஷகரமான விஷயம்.

நாகப்பட்டணத்தில் மற்றொரு விசேஷம் என்னவெனில் இந்துக்களும் மகம்மதியர்களும் ஒருவருக்கு ஒருவர் சகோதரபாவமுற்றிருப்பதும் நாகூர் பள்ளிவாசலை ஹிந்துக்களும் மகம்மதியர்களும் நன்கு மதிப்பதும் யாவரும் ஆனந்தத்துடன் கவனிக்கத் தக்கது-

---

## புத்தக வரவு.

---

**யோக சூத்திரம், யோக உபந்யாஸங்கள்:**—முன்னது பதஞ்சலி மஹரிஷி அருளிச் செய்தது. காலஞ்சென்ற பத்திராசிரியர் ப. நாராயண ஐயரவர்களால் தமிழ் மொழிபெயர்ப்பு, குறிப்புரையுடன் வெளியிடப்பட்டது. இதன் விலை ரூ ஒன்று. இத்துடன் சேர்த்துப் படிக்க வேண்டியதற்கு உபயோகமா யிருக்கக்கூடியதாக **யோக உபந்யாஸங்கள்**, என்ற தலைப்பெயருடன் ஸ்ரீபெஸண்டு அம்மையார் யோக விஷயமாய் உபந்யசித்துள்ள வற்றையும் மொழி பெயர்த்துள்ளார். இதன் விலை அணு 12. வேண்டுவோர் மதுரை பிரஹ்மக்ஞான மந்திரத்திற் கெழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

---

**லோகதருவாகிய பரமன் வருவானேன்?**—இது தமிழில் புதிதாய் வெளிவந்துள்ள ஓர் சிறு புத்தகம். "லோககுரு வருகிறார், வருகிறார்" என்று பலர் இப்போது கோஷிக்கிறார். ஆயினும் அதற்கு உள்ள காரணங்கள் என்ன என்பது இதில் தெளிவாய்க் கூறப்பட்

ள்ளன. பிரஹ்மஞான ஸபையில் ஓர் பிரமுகரும், தத்துவதரிசியுமான ஸ்ரீமான் லெட்பீடாவர்கள் ஆஸ்டிரேலியாவில் கன்காரிடியா ஹாலில் உபந்யஸித்ததின் தமிழ்மொழி பெயர்ப்பு. இதிலுள்ள விஷயத்தின் பாரம்யத்தை உத்தேசிக்க, (தபாற்கூலி யுள்பட) இதின் விலை $1\frac{1}{2}$ அணு சொற்பம்தான். நக்ஷத்ர ஸங்க மெம்பர்களும், பிரஹ்மஞான ஸபையைச் சேர்ந்தவர்களும் மற்றும் யாவரும் அவசியம் இதை வாங்கிப் படித்தல் வேண்டும்.

---

ஜாதி யோக்கியதை:—கோயமுத்தூர் மைத்திரேயர் உதய நக்ஷத்திர கிளைச் சங்கத்தாரால் பிரசுரிக்கப்பெற்றது. அக்கிளைச் சபைக் காரியதரிசியார் பாஞ்சோதியாரால் மொழி பெயர்க்கப்பெற்றது. விலை 3 அணு. சென்னையில் 1913ஆம் வருஷம் நவம்பர் மாதம் 16ஆம் தேதியில் திவான் பகதூர் கோவிந்தராகவய்யர் அக்கிராசனத்தின்கீழ் மாதுஸ்ரீ பெஸண்டம்மையார் செய்த பிரசங்கத்தை மொழி பெயர்ப்பாசிரியர் இனிய தமிழில் யாரும் சுலபமாய்க் கிரகிக்கும்படி வெளியிட்டிருக்கிறார். பிரஹ்மஞான புத்தகங்களை தமிழில் மொழிபெயர்த்து தமிழுலகில் செவ்வனே பரவச் செய்ப வேண்டியது மிகவும் அவசியம். இவ்வாசிரியர் இக்கடமையை மேற்கொண்டால் இனிது முடிக்கவல்லவர் என்பது இம்மொழி பெயர்ப்பிலிருந்து நன்கு விளங்குகின்றது. ஆனால் இனி வெளிவரும் புத்தகங்கள் நல்ல தாளில் அச்சிடப்பட்டால் படிப்போருக்கு சுகமாயிருக்கும்.

---

ஸந்மார்க்க முறையில் ஹிதோபதேசம்:—இதுவும் மதுரை பிரஹ்மஞான ஸபையில் கிடைக்கக்கூடிய ஓர் அரிய புத்தகம் தியாசாபிகல் சொஸைடியாகிய பிரஹ்மஞான ஸபையின் ஆதிஸ்தாபிகராகிய ஸ்ரீபிளவாட்ஸ்கி அம்மையார் அருளிய கிரந்தத்தின் தமிழ் மொழிபெயர்ப்பு. இதன் விலை தபாற்கூலி யுள்பட அணு $2\frac{1}{2}$.

---

# சர்வதேள் விஷ சஞ்சீவி.

## கதறிவந்தவன் களிப்புடன் செல்வான்!

### விஷந்தீண்டினவன் நிமிஷத்திற் குணமடைவான்!!

### குணமில்லாவிட்டால்

## ரூபாய் 100 இனாம் கொடுக்கப்படும்!!!



நண்பர்களே! ஒவ்வொரு வீட்டிலும் தேளினுடைய உபத்திரவம் பொறுக்க முடியாமல் அவஸ்தைப்படுவதை நாம் அனைவரும் கண்டு விசனமுற நேரிடுவதைப்பற்றி, நாம் அதிககஷ்டப்பட்டு இதற்காக உயர்ந்தமருந்து கண்டுபிடித்திருக்கிறோம். இது அநேக ஐரோப்பியடாக்டர்களாலும், தமிழ்வைத்திய பண்டிதர்களாலும், நன்கு மதிக்கப் பெற்றது. எமது மேற்கண்ட லங்கர் மார்க்குள்ள சர்வதேள் விஷசஞ்சீவியை தேள் கொட்டின இடத்தில உபயோகிக்க உடனே ஒன்றிரண்டு நிமிஷத்திற்குள் குணமடையச்செய்யும். இவ்விஷ சஞ்சீவியை இன்னும் எலி, நாய் பூரான், செய்யான், பாம்பு, கண்டு, தறக்கா முதலிய எவ்வித விஷ ஜெந்துக்கள் தீண்டினபோதிலும், டைரக்ஷனில் சொன்ன பிரகாரம் உபயோகித்தால் குண மடையலாம்.

மேற்சொன்னவைகளுக்கு உபயோகித்து குணமில்லாவிடில் பணம் வாபீஸ் செய்துவிடப்படும்.

இந்த லங்கர் மார்க்குள்ள சர்வதேள் விஷ சஞ்சீவியைக் கைப்பற்றுங்கள். இவ்விஷ சஞ்சீவி ஒவ்வொ வீட்டிலும் அவசியம் இருக்கவேண்டியது. ஏனென்றால், ஓர் மனிதனை இரவில் 12 மணிக்கு நித்திரையில் விஷந்தீண்டிவிட்டால், அம்மனிதன் எவ்வளவோ அவஸ்தைப்பட அநேக மருந்துகளையும் மந்திரங்களையும் உபயோகித்தும் பயன்படாமற் போகிறதல்லவா? அதற்காக இவ்விஷ சஞ்சீவி ஒவ்வொரு இல்லத்திலும் அவசியம் இருக்கவேண்டியது.

வேண்டுபவர்கள் அடியிற்கண்ட விலாசத்துக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

| | ரூ அ பை |
|---|---|
| விலை பாக்கெட் 1-க்கு ரூ | 0—8—0 |
| டசன் 1-க்கு ரூ | 5—0—0 |

விலாசம்:—வி. எ. எஸ். பாணி,
நெ. 3. இருளப்பன் தெரு, மதராஸ்.

# இந்தியாவில் மிகப்பெரிதும் பழமையுமான வைத்தியசாலை எது?

1881-ஞூலில் ஜாம்நகரில் ஸ்தாபிக்கப்பட்ட

# ஆதங்கநிக்ரஹ ஔஷதாலயம்.

குழந்தைகளுக்கு சகலரோகங்களையும் குணப்படுத்தும்.

சஞ்சீவி

பாலமித்ர.

300 மாத்திரை கொண்ட டப்பி 1-க்கு ரூபா 1.

வியாதியைப்பற்றி விபரமாய் தெரிவிப்போருக்கு நன்றாய் ஆலோசனைசெய்து திருப்தியான விடைகொடுக்கிறோம்

கடிதங்களுக்கு உடனே பதில் எழுதப்படும்.

இந்த

ஔஷதாலயத்தில் விருத்த வைத்திய பாரங்கதரும், வித்தியா பட்டம்பெற்ற மேதாவிகளும், சாஸ்திர சம்பன்னர்களும் திறமைவாய்ந்த அதிகாரிகளுமாக நூற்றுக்கணக்கான ஜனங்கள் உத்தியோகம் செய்கிறார்கள்.

முதன்மையான

மருந்து சென்ற 35-ஞூ காலமாய் உபயோகிப்போருக்கு அற்புதகுணத்தைக் கொடுத்து தேகபலத்தையும் மனோவன்மையும் கொடுத்து பெரும்புகழ் படைத்திருக்கிற ஆதங்க நிக்ரஹ மாத்திரைகள் 32. மாத்திரையின் விலை ரூ 1.

வைத்திய சாஸ்திரி

மணிசங்கர் கோவிந்தஜீ

ஆதங்கநிக்ரஹ ஔஷதாலயம்,

157, பிராட்வே, மதராஸ்.

96, மவுண்ட்ரோட், மதராஸ்.

இருமல், கபம் காசம் இவைகளுக்கு சிறந்த மருந்து.

காசாந்தக

மாத்திரைகள் டப்பி 1-க்கு விலை ரூ 1.

இதுவரை எங்கள் கேட்லாக்கை பார்த்திராவிடில் உடனே உங்கள் விலாசத்தை எழுதுங்கள் எவ்வித செலவில்லாமலும் இனமாய் அனுப்புகிறோம்.